உ

கடவுள் துணை.

சிதம்பரப்பாட்டியல்

(உரையுடன்).

மதுரைத் தமிழ்ச் சங்கத்துச்

"செந்தமிழ்"ப்பத்திராசிரியர்

மு. இராகவையங்காரால்,

பரிசோதிக்கப் பெற்றது.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—உக.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1911.

விலை அணா-6.

முகவுரை

——:0:——

பாட்டியல் என்பது, யாப்பைப்பற்றிய இலக்கணங்கள் பலவற்றை உணர்த்தும் நூல்விசேடமாகும். இவ்விலக்கணநூல்களிற் பழமையானது, நாற்பாவகவலில் முன்னோரியற்றிய பன்னிருபாட்டியல் என்பது. இஃதன்றி வெண்பா கலித்துறை விருத்த முதலாக வெவ்வேறு பாக்களில் இயற்றப்பட்ட பாட்டியல்களும் வழங்குகின்றன. இவற்றுள் ஒன்று இச்சிதம்பரப்பாட்டியலும்; இது நாற்பத்தாறு எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமுடையதாய், உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் பொருத்தவியல் என நான்கியல் கொண்டுள்ளது. "பாடு முறைமைக்கும் பண்ணு தமிழ்தெளிந்து-கூடும் பனுவற்குச் சொற்பொருள்கள்-நாடுதற்கும்"—இந்நூல் பேருதவியாவது. இனிய வாக்கில் தெளிவாக விஷயங்களை எடுத்துவிளக்குதலால், பிற்காலத்துக் கவிஞரெல்லாராலும் இந்நூல் பெரிதும் போற்றப்படுவது.

இந்நூலாசிரியர் பரஞ்சோதியார் என்பார். இவர், சிதம்பர புராணம், மதுரையுலா என்ற நூல்களியற்றியவரும் பௌராணிகருமாகிய திருமலைநாதர் என்பவர்க்குப் புத்திரரென்பதும், மெய்கண்டதேவர் சந்தானத்தினராய்க் கச்சியிலிருந்தவரும், தம்மாசிரியருமாகிய தத்துவஞானப் பிரகாசமுனிவர் ஆணைப்படி இந்நூலை அவர் பாடினரென்பதும் இதன் பாயிரப்பாடல்களாற் புலப்படுகின்றன. இவையன்றி, நூலாசிரியர் காலமுதலிய வேறுசெய்திகள் இப்போது தெரிந்தில. இந்நூற்கியற்றப்பட்டவுரை, யாப்பிலக்கணங்களைத் தெளிவுறுத்தி இனியநடையில் அமைந்துள்ளது. இதனைச் செய்தவர், நூலாசிரியர்தாமோ, அன்றிப் பிறரோ அறியோம். இவ்வுரை, ஒழிபியல் மூன்று பாடற்கும் பொருத்தவியல் முழுமைக்கும் கிடைக்கவில்லை. இத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலைப் பிரதிகள் மூன்றும், சங்கத்துச் சைவநூற் பரிசோதகர் ஸ்ரீமத்-சேற்றூர். ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் அளித்த பிரதியொன்றும் இந்நூற் பரிசோதனைக்கு உதவியன. இப்பதிப்பிலுள்ள "குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்-கற்றறிந்த மாந்தர் கடன்."

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்ப்"பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

சிதம்பரப்பாட்டியல்

மூலமும் உரையும்.

காப்பு.

நினைத்தவர்க்கு மன்றி நினைக்குமவர் தம்மை
நினைப்பவர்க்கு முத்தி நிரம்பும்—அனைத்துமாம்
ஆரணத்து முன்னவனு மம்பிகையும் பெற்றமத
வாரணத்தின் பாத மலர்.

பாடலாஞ் செந்தமிழைப் பாடி யரனருளைக்
கூடலா மின்பநலங் கொள்ளலாம்—பேடறாய்
நாட்டியசீர்ப் பாவினங்க ளுடுஞ் சிதம்பரப்
பாட்டியலைக் கற்றார் பயன்.

பாடு முறைமைக்கும் பண்ணு தமிழ்தெளிந்து
சூடும் பனுவற்குச் சொற்பொருள்க—ளுடுதற்கும்
எண்ணிலராய் நின்றாரு மிந்நூல் வினவினரேற்
கண்ணிலான் காட்சியது காண்.

பூமன்னு பொழில்வெண்ணை மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞான ப்ரகாசமாய் வந்து
பாமன்ன வுரையென்ன வவனருளா லவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலு
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரிபு ராணத்
திருமலைநா யகனருளின் றேசுபூண் டோனே.

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் றமிழாற்
சிதம்பர புராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்றவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் றான்.

நூல்.

க-வது உறுப்பியல்.

க. பூமேவு திசைமுகனுஞ் செங்கணெடு மாலும்
புத்தேளிர் கணங்களுமா தவத்தோரும் போற்றத்
தேமேவு குழலுமையாள் கண்டுவப்ப மன்றிற்
றிருநடஞ்செய் பேரொளியைச் சிந்தைதனில் வைத்துக்
காமேவு கிளியென்னக் கொழுஞ்செழுந்தே னென்னக்
கடலமுத மென்னமிளிர் கனித்துவர்வாய் மாதே
பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவன் யானே.

உ. யாப்புவிதி யெழுத்தசைசீர் பந்தமடி தொடைபா
வினமிவையிற் குறினெடிலொற் றுயிர்மெய்யுயி ராய்தம்
கோப்புடைக்குற் றுகரங்குற் றிகரமையௌ காரக்
குறுக்கமே வல்லினமெல் லினமொடிடை யினமே
நீப்பரிய வுயிரளபொற் றளபசையி னெழுத்தாம்
நெடில்குறில்க ளனித்துமொற்றை யடுத்துவரி னேராம்
சாய்ப்பரிய குறிலிணைகள் குறினெடில்க ளணித்துந்
தமதுடனொற் றடுத்தும்வரி னிரையசையு மாமே.

'பூமேவு...பகர்ந்திடுவன்யான்' என்றது வணக்கம்; "வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிர மாம்."

'யாப்பு விதி......எழுத்தாம்' என்றது, யாப்பினதுவிதி எழுத்து முதல் எட்டாம் என்றவாறு. அவற்றுள்; எழுத்தாவன:—குறிலெனவும் நெடிலென வும் மெய்யெனவும் உயிர்மெய்யெனவும் உயிரெனவும் ஆய்தமெனவும் குற் றிய லுகரமெனவும் குற்றியலிகரமெனவும் ஐகாரக்குறுக்கமெனவும் ஔகாரக் குறுக்கமெனவும் வல்லினமெனவும் மெல்லினமெனவும் இடையினமெனவு ம் உயிரளபெடையெனவும் ஒற்றளபெடை யெனவும் வரும். இவற்றுள்; குறி லாவன:—அ இ உ எ ஒ என ஐந்தாம்; நெடிலாவன:—ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என ஏழாம்; மெய்யாவன:—க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன எனப்பதினெட்டாம். உயிர்மெய்யாவன:—இவற்றின்மேல் உயிர் ஏறிய வை; க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ எனவரும். இப்படியே, பதினெட்டொற்றின் மேலும் பன்னீருயிரும் ஏற, இருநூற்றிருபத்தா றெழுத்தாம். உயிராவன:—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ எனப்

பன்னிரண்டாம். ஆய்தமாவன:—எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு என வரும். குற்றியலுகரமாவன:—நாகு காசு காடு காது காபு காறு என நெடிற்கீழும், நாக்கு காச்சு காட்டு காத்து காப்பு காற்று என நெடிலொற்றின் கீழும், வரகு முரசு முருடு மருது துரபு கவறு எனக்குறிலிணைக்கீழும், அரக்கு பொரிச்சு தெருட்டு குருத்து பொருப்பு சிரற்று எனக்குறிலிணையொற்றின்கீழும், அசோகு பலாசு மலாடு கொடாது புதாபு விராறு எனக்குறினெடிற்கீழும், தமாக்கு தடாச்சு பனாட்டு கெடாத்து புதாப்பு விராற்று எனக் குறினெடிலொற்றின் கீழும், கக்கு கச்சு கட்டு கத்து கப்பு கற்று எனக்குற்றொற்றின் கீழும் குற்றியலுகரம் வந்தவாறு கண்டுகொள்க. இனி, குற்றியலிகரம் வருமாறு:—நாகியாது காசியாது காடியாது காதியாது காபியாது காறியாது எனவும் பிறவு மேற்கூறியவாறும், கேண்மியா சென்மியா எனவும் வரும். பிறவும் வருவன இவ்வாறொட்டிக்கொள்க. இனி, ஐகாரக்குறுக்கமாவன:— ஐப்பசி மைப்புறம்; மடையன் உடைவாள்; குவளை தவளை திணை பனை என மூவிடத்தும் முறையே குறுகிவந்தன. இனி, ஔகாரக்குறுக்கமாவன:— மௌனம் மௌலி கௌவை என முதற்கட் குறுகினவாறு. வல்லினமாவன:—கசடதபற. மெல்லினமாவன:—ஙஞணநமன. இடையினமாவன:— யரலவழள. இனி, உயிரளபெடையாவன:—ஆஅகை ஈஇகை ஊஉகம் ஏஎரி ஐஇயல் ஓஒதை ஔஉவியம் என முதனிலையளபெடை வந்தவாறு. பதாஅகை செலீஇயர் உலூஉகம் பரேஎரி வளைஇய விரோஒதம், மனௌஉகம் என இடைநிலையளபெடை வந்தவாறு. குராஅ குரீஇ குழூஉ எனேஎ விளைஇ அரோஒ அனௌஉ என இறுதிநிலையளபெடை வந்தவாறு. ஒற்றளபெடை வருமாறு:—மங்ங்கலம் மஞ்ஞ்சு மண்ண்ணு பந்ந்து அம்ம்பு மின்ன்னு தெவ்வ்வர் வெய்ய்யர் செல்ல்க கொள்ள்கை எஃஃகு எனக் குறிற்கீழும், அரங்ங்கம் முரஞ்ஞ்சு முரண்ண்டு பருந்ந்து அரும்ம்பு முரன்ன்று குரவ்வ்வை அரய்ய்யர் குரல்ல்கள் திரள்ள்கள் வரஃஃகு எனக்குறிலிணைக்கீழும், அளபெடை வந்தவாறு. பொன்ன் மடங்ங் கலந்த என இறுதிநிலையளபெடை வந்தவாறு.

இவற்றுக்குப் பிறசூத்திரம்:—

"யாப்பும், பாட்டுந் தூக்குந் தொடர்புஞ் செய்யுளை
நோக்கிற் றென்பர் நுணங்கி யோரே."

"எழுதப் படுதலி னெழுத்தே யவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே யசையியைந்து
சீர்கொள நிற்றலிற் சீரே சீரிரண்டு
தட்டு நிற்றலிற் றளையே யத்தளை
யடுத்து நடத்தலி னடியே யடியிரண்டு
தொடுத்துமுத லாயிற் றொடையே யத்தொடை
பாவி நடத்தலிற் பாவே பாவொத்

சிதம்பரப்பாட்டியல்

தினமாய் நடத்த லினமெனப் படுமே"

"பந்தந் தலையின் பாற்பெய ராகும்"

"அஇ உஎ ஒக்குறி லைந்தே"

"ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்"

"ககர முதல னகர விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப"

"மெய்யுடம் புறப்பொற் றிவைதா மொருபொருள்
செய்யு மென்று செப்பினர் புலவர்"

"உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
யம்மூ வாறு முயிரோ டுயிர்ப்ப
யிருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே"

"அகர முதல ஔகார விறுவாய்ப்
பன்னிரண் டெழுத்து முயிரென மொழிப"

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே"

"அஃகேன மாய்தந் தனிநிலை புள்ளி
யொற்றிப் பாலெ வைந்து மிதற்கே"

"நெடிலே குறிலிணை குறிணெடி லென்றிவை
யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

"எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்று வரூஉம் வல்லா றூர்ந்தே"

"வல்லெழுத் தாறே டெழுவகை யிடத்து
முகர மரையாம் யகரமோ டியையி
னிகர முங் குறுகு மென்மனார் புலவர்"

"யகரம் வரக்குற ளுந்திரி யிகரமு
மசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய"

"தற்சுட் டளபொழி யைம்மூ வழிய
நையு மௌவு முதலற் றாகும"

"இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடி
லளபெழு மவற்றவற் றினக்குறிற் குறியே"

"ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை யாகும"

"ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை

மிகலே யவற்றின் குறியாம் வேறே"

"மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்"

"கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"

"உன்னல் காலே யூன்ற லரையே
முருக்கல் முக்கால் விடுத்த லொன்றே"

"மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையளக் குறுக்க மொற்றளை
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னய்த மாத்திரை"

எனவரும். பிறவுமன்ன.

"நெடில்குறில்க டனித்துமொற்றை யடுத்தும்வரி னேரம் சாய்ப்பரிய குறிலிணைகள் குறிநெடில்க டனித்துந், தமதுடனொற் றடுத்தும்வரி னிரையசையு மாமே" என்றது நெட்டெழுத்துத் தனியே வரினும் குற்றெழுத்துத் தனியேவரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்துவரினும் குற்றெழுத்து ஒற்றடுத்துவரினும் நேரசையாம்; குறில் இணைந்து வரினும் குறிநெடில் இணைந்துவரினும், குறிலிணை ஒற்றடுத்துவரினும் குறிநெடில் ஒற்றடுத்துவரினும் நிரையசையாம் என்றவாறு. ஆ - என நெட்டெழுத்துத் தனியே வந்த நேரசை. ழி - எனக்குற்றெழுத்துத் தனியேவந்த நேரசை. செல் - எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை. போர் - என நெட்டெழுத்து ஒற்றடுத்துவந்த நேரசை. சின - எனக் குறில் இரண்டிணைந்து வந்த நிரையசை. தசை-எனக்குறிநெடில் இணைந்துவந்த நிரையசை. எழில் - எனக்குறிலிணை ஒற்றடுத்துவந்த நிரையசை. சுலாம் - எனக்குறிநெடில் ஒற்றடுத்து வந்த நிரையசை. இவற்றுக்கு உதாரணம்:—

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழைபு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே."

எனவரும். இதில் நேர்நிரை கண்டுகொள்க. "அசையும்" என்ற உம்மையால், நேர்பசை நிரைபசை என்னும் இரண்டுங்கூட்டி அசை நான்கென்பாருமுளர்.

௨. நிரலியற்சீர் நேர்நேர்தே மாநிரைநேர் புளிமா
நிரைநிரையே கருவிளமே நேர்நிரை கூ விளம்பின்
வருநேர்காய் வெள்ளைநிரை வரிற்கனி வஞ் சிச்சீர்
மற்றுநேர் நிரைவரிற்றண் ணிழல்நேர்நேர் தண்பூப்
பரவுநிரை நேர்நறும்பூ நிரைநிரைவந் தக்காற்
பகருநறு நிழலாமீ ரெட்டிவைநா லசைச்சீர்
விரவுவஞ்சி நாண்பலரோ ரசைச்சீர் ரசைச்சீர்
மேவியபோற் றளைதமக்கு விளங்கிமரு விடுமே.

"நிரலியற்சீர்... .....நேர்நிரை கூவிளம்" என்றது, இந்த ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியச்சீர் என்றவாறு. நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை எனவும், தேமா புளிமா கருவிளம் கூவிளம் எனவும் வரும். "பின்வரும் நேர்காய் வெள்ளை" என்றது, அவை நிரலேநிற்க, பின்னேவரும் நேர், நேர் நேர்நேர்: தேமாங்காய்; பிறவுமன்ன; இவை நாலும் வெண்சீர் என்றவாறு. "நிரைவரிற் கனிவஞ்சிச்சீர்" என்றது, இப்படியே பின்னே நிரை நாலும் வந்தால் நேர்நேர்நிரை: தேமாங்கனி; பிறவுமன்ன; இவை நாலும் வஞ்சிச்சீர் என்றவாறு. 'மற்றும் நேர்நிரைவரில்... பகருநறுநிழல்' என்றது, அவ்வாறு பின்னே நேர்நிரைவந்தால் நேர்நேர்நேர்நிரை: தேமாந் தண்ணிழல்: பிறவுமன்ன; அப்படிப்பின்னே நேர்நேர் வநதால் நேர்நேர்நேர் நேர்: தேமாந்தண்பூ: பிறவுமன்ன. பின்னே நிரைநேர் வந்தால் நேர்நேர் நிரைநேர்: தேமாநறும்பூ: பிறவுமன்ன. பின்றுன் நிரைநிரை வந்தால் நேர் நேர்நிரைநிரை: தேமாநறுநிழல்: பிறவுமன்ன. இவைபதினாறு பொதுச்சீரும் வஞ்சி. "நாண்மலரோரசைச்சீர்" என்றது, நாள் எனவும் மலரெனவும் வருமி வையிரண்டும் ஓரசைச்சீர் என்றவாறு. ஆகச்சீர் முப்பது. இந்த ஓரசைச்சீருக் குத்தளை ஆசிரியச்சீருக்குரைத்த தளையெனக்கொள்க. 'நிரல்' என்பதனையும் பின்னென்பதனையும் எல்லாவற்றிற்கும் தீபயாக ஒட்டிக்கொள்க. "இயற்சீ ராசிரியச்சீ ரகவற், சீரென மொழிப சிறந்திசி னோரே." வாய்பாடு:—நேர்நேர் தேமா, நிரைநேர் புளிமா, நிரைநிரை கருவிளம், நேர்நிரை கூவிளம்: இவை ஆசிரியச்சீர். நேர்நேர்நேர் தேமாங்காய், நிரைநேர்நேர் புளிமாங்காய், நிரை நிரைநேர் கருவிளங்காய், நேர்நிரைநேர் கூவிளங்காய்: இவை வெண்சீர். நேர் நேர்நிரை தேமாங்கனி, நிரைநேர்நிரை புளிமாங்கனி, நிரைநிரைநிரை கரு விளங்கனி, நேர்நிரைநிரை கூவிளங்கனி: இவை வஞ்சிச்சீர். நேர்நேர்நேர்நிரை தேமாந்தண்ணிழல், நிரைநேர்நேர்நிரை புளிமாந்தண்ணிழல், நிரைநிரை நேர்நிரை கருவிளந்தண்ணிழல், நேர்நிரைநேர்நிரை கூவிளந்தண்ணிழல் என வும்; நேர்நேர்நேர்நேர் தேமாந்தண்பூ, நிரைநேர்நேர்நேர் புளிமாந்தண்பூ,

நிரைநிரைநேர்நேர் கருவிளந்தண்பூ, நேர்நிரைநேர்நேர் கூவிளந்தண்பூ எனவும்; நேர்நேர்நிரைநேர் தேமாநறும்பூ, நிரைநேர்நிரைநேர் புளிமாநறும்பூ, நிரைநிரைநிரைநேர் கருவிளநறும்பூ, நேர்நிரைநிரைநேர் கூவிளநறும்பூ எனவும், நேர்நேர்நிரைநிரை தேமாநறுநிழல், நிரைநேர்நிரைநிரை புளிமாநறுநிழல், நிரைநிரைநிரைநிரை கருவிளநறுநிழல்; நேர்நிரைநிரைநிரை கூவிளநறுநிழல் எனவும் வரும்: இவை பொதுச்சீர். நாண் மலர் என்பன ஓரசைச்சீர். இவற்றிற்கு உதாரணம்:—

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

இவ்வாசிரியப்பாவினுள் நான்காசிரியவுரிச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க.

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாமுலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும்."

இவ்வெண்பாவினுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

"சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனவாங்கு:
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."

இவ்வஞ்சிப்பாவினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

"அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடை நீழல்

வெங்கண்வினைப்பகை வீளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மமைவெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந், தருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே.

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் பொதுச்சீர் பதினாறும் அடிதோறும் வந்த வாறு கண்டுகொள்க.

"நன்றறி வார்ற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"

இவ்வெண்பாவினுள் 'இலர்' என நிரையசைச்சீராயினவாறு கண்டுகொள்க.

"பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர்"

இவ்வெண்பாவினுள் 'நீர்' என நேரசைச் சீராயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. இனி, ஓரசைச்சீருக்குத் தளைவருமாறு:—

"உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற வென்பவே"

இம்மூச்சீரடி வஞ்சிவிருத்தத்துள் 'மழை' 'செய்' என்னும் அசைச்சீர்கள் இயற்சீரேபோலக்கொண்டு, வருஞ்சீர் முதலசையோடொன்றுமலும் ஒன்றியும் வந்தமையால், முறையே இயற்சீர்வெண்டளையும் ஆசிரியத்தளையு மாயின. (உ)

ங. மருவுவிள முன்னர்நிரை நிரையொன்று சிரிய
ர்முன்னேர் வரினேரொன் றாசிரியத் தளையாம
விரவியகாய் முன்னர்நேர் வெண்சீர்வெண் டளையா
மீட்டுங்காய் முன்னர்நிரை * கலித்தளையா மின்னே

கருதுகனி முன்னானேரொன்றாத வஞ்சி
கனிமுனிரை யொன்றியவஞ் சித்தளையா மாமுன்
னிரையும்விள முன்னேரு மியற்சீர்வெண் டளையாம்
நிழல்கனியாம் பூக்காயாம் நிகழ்பொதுச்சீர்த் தளைக்கே.

என்பது—விளமென நிற்ப நிரையெனவருவது நிரையொன்றாசிரியத் தளை; மாவெனநிற்ப நேரென வருவது நேரொன்றாசிரியத்தளை; காயெனநிற்ப நேரெனவருவது வெண்சீர் வெண்டளை; காயெனநிற்ப நிரையென வருவது கலித்தளை; கனியென நிற்ப நேரெனவருவது ஒன்றாதவஞ்சித்தளை; கனியெனநிற்ப நிரையெனவருவது ஒன்றியவஞ்சித்தளை; மாவெனநிற்ப நிரையெனவருவதும் விளமெனநிற்ப நேரெனவருவதும் இயற்சீர் வெண்டளை எனவரும்; தண்ணிழற்சீருக்கும் நறுநிழற்சீருக்கும் கனிச்சீருக்குரைத்தாங்குத் தளைகொள்க; தண்பூச்சீருக்கும் நறும்பூச்சீருக்கும் காய்ச்சீருக்கு உரைத்த தளையே கொள்க. இவற்றுக்குதாரணம்:—

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே."

இது நிரையொன்றாசிரியத்தளையும் நேரொன்றாசிரியத்தளையும் வந்த செய்யுள். "பொன்னாரமார்பின்"—இது வெண்சீர் வெண்டளையும் இயற்சீர்வெண்டளையும் வந்தசெய்யுள். "செல்வப்போர்க் கதக்கண்ணன்"—இது கலித்தளையான் வந்த செய்யுள். "சுறமறிவன துறையெல்லாம்"—இஃது ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றாதவஞ்சித்தளையும் வந்த செய்யுள். நாலசைப் பொதுச்சீருக்குத் தளை முன்னர்க்காட்டிய 'அங்கண்வானத்து' என்னும் வஞ்சிப்பாவினுட் கண்டுகொள்க. (௩)

௪. நிகழிருசீர் குறளடிமுச் சீர்சிந்து நாற்சீர்
நேரொடளவடியைஞ்சீர் நெடிலடியா றாதி
திகழ்தருசீர் கழிநெடில்வெள் ளடியிரண்டு மூன்றா
சிரியம்வஞ்சி மூன்றுகலி நான்கிழிபு பெருமை
யகல்பொருண்மட் டெழுத்தசைசீ ரடியந்த மாதி
யாமந்தா தித்தொடையே யடிமுழுது மொருசொற்
புகல்வதிரட் டைத்தொடையா மோனைமுத லாகப்
பகன்றதொடை புகலாது புகல்வதுசெந் தொடையே.

"நிகழிருசீர்...........அகல்பொருண்மட்டு"—என்பதற்கு உதாரணம் வருமாறு :—

"திரைத்த சாலிகை—நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே—விரைக்கொண் மாலையாய்"

இஃது அடிதோறும் இருசீராதலால், குறளடியான் வந்த செய்யுள்.

"இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினே
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினுய்"

இஃது அடிதோறும் முச்சீராதலால், சிந்தடியான் வந்த செய்யுள்.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளு மதுத்தண் டேட்டமு
தாம்பழுத் துளசில தவள மாடமே"

இஃது அடிதோறும் நாற்சீராதலால் அளவடியான் வந்த செய்யுள்.

வென்றான் வினையின் றொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னெழி யாது மூற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்.

இஃது அடிதோறும் ஐஞ்சீராதலால் நெடிலடியான் வந்த செய்யுள்.

"இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்ந் தினவண்டு புடைசூழ, நுரைக்க ளென்னுமக்*குழம்புக டிகழ்ந்தெழ நுடங்கிய விலயத்தால், திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத், தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு பொரு தல தவியாதே"

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான்வந்த செய்யுள்.

"கணிகொண் டலர்ந்த நறுவேங்கை யோடு கமழ்கின்ற காந்த ளிதழா லணிகொண் டலர்ந்த வனமாலை சூடி யகிலாவி குஞ்சி கமழ

* "குழம்புகொண்டெதிர்ந்தெழ" என்றும் பாடம்.

மணிகுண் டலங்க ளிருபாலும் வந்து வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு வருவா னிதென்கொ றுணி
[வே.’

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

“மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலகு † மூடி முளைவயிர நாறித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண் [டால்
சேவடிக டாமரையின் சேயிதழ்க டண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலன்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தம் கோவே”

இஃது எண்சீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

“இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாரை
யிலங்கு மாழியின் விலங்கியோள் [யை
முடங்கு வாலுளை படங்கள் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை
சுந்தரி வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
றடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்
பவர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே”

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

“கொங்கு தங்கு கோதையோதி மாதரோடு கூடி நீடு போடை
நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத நாத வென்று
நின்று தாழ
அங்க பூர்வ மாதி யாட வாதி நூலி னீதி யோது மாதி யாய
செங்கண் மாலை * காலை சென்று சேர்நர் சேர்வர் சோதி சேர்
ந்த சித்தி தானே”

---

† “மூடியெழின் முளைவயிர் நாற்றி” என்றும்பாடம்.

* “மாலை காலை சேர்நர் சேர்வர்” என்றும் பாடம்.

இது பதின்சீர்க்கழிநெடிலடியான் வந்த செய்யுள். பிறவும் வந்துழிக் கண்டு கொள்க.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமைவந்தவாறு.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு. "செல்வப் போர்" இது நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"செங்கண்மேதி கரும்புழக்கி
யங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ்
செழுநீர்—நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே"

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு. பிறவு மன்ன

இனி, "எழுத்தசைசீர்.........செந்தொடையே" என்பதற்குதாரணம். அந்தாதித்தொடை வருமாறு:—

"உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இது நானகந்தாதித் தொடையும் வந்த செய்யுள். இனி இரட்டைத்தொடைசெந்தொடைகள் வருமாறு:—

"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சிறெறி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்"

இஃது ஓரடிமுழுதும் வந்தமொழியே வந்தமையால் இரட்டைத்தொடை.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"

இது மோனைமுதலாகிய தொடையின்றி வந்தமையாற் செந்தொடை; பிறவுமன்ன. (ச)

ரு. தொடையெழுவா யெழுத்தொன்றின் மோனையியை பிறுதி
சொல்லிரண்டா மெழுத்தொன்றி னெதுகைபொருண் [மொழிகள்
யுடன்முரணின் முரணளபு வருதலடி யளவே
யுயிருசீ ரிணைதலிணை முதலொடுமூன் றுஞ்சீர்
அடைபொழிப்பு நடுவிருசீ ரகறலொரூஉ வடியி
னடர்தருமுச் சீர்கூழை முதலயற்சீர் நீங்கல்
கெடலருமேற் கதுவாயே யீற்றயற்சீர் நீங்கல்
கீழ்க்கதுவாய் சீர்முழுதுங் கிடைத்திடின்முற் றுமே.

"தொடையெழுவாய் எழுத்து ஒன்றின் மோனை"—என்றது, அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத்தொடை. "இயைபு இறுதி" என்றது, அடிதோறும் இறுதி யெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது அடியியைபுத்தொடை. "சொல்லிரண்டாம் எழுத்தொன்றின் எதுகை" என்றது, அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது அடியெதுகைத் தொடை. "பொருண் மொழிகளுடன் முரணின் முரண்" என்றது, பொருளானே யாயினும் சொல்லானே யாயினும் அடிதோறும் முதன் மொழிக்கண் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்டொடை. "அளபு வருதல் அடியளவே" என்றது, அடிதோறும் முதன் மொழிக்கண் அளபுவரத் தொடுப்பது, அடியளபெடைத்தொடை. "உயிருசீரிணை தலிணை............சீர்முழுதுங் கிடைத்திடின் முற்றுமே" என்றது, முன் சொன்ன மோனை இயைபு எதுகை முரண் அளபு என்னும் இவ்வைந்தினும் இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று என்னும் இவை எழுங் கூட்டி உறழ முப்பத்தைந்து தொடையாம்; வரலாறு:— இணைமோனைத்தொடை, பொழிப்புமோனைத்தொடை, ஒரூஉமோனைத்

தொடை, கூழைமோனைத்தொடை, மேற்கதுவாய் மோனைத்தொடை, கீழ்க்கதுவாய் மோனைத்தொடை, முற்றுமோனைத்தொடை எனவும்; இவ்வாறே இயைபு, எதுகை முதலியவற்றோடு ஒட்டியும் ஆகத்தொடை முப்பத்தைந்தாமாறு கண்டுகொள்க.

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையின்
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே"

இஃது அடிதோறும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் அடிமோனைத்தொடை.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளிக் கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே."

இஃது அடிதோறும் இறுதியெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் அடியியைபுத்தொடை.

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே."

இஃது அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையால் அடியெதுகைத்தொடை.

"இருள் பரந் தன்ன மாநீர் மருங்கின்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே."

இஃது அடிதோறும் முதற்சீர் மறுதலைப்படத் தொடுத்தமையால் அடிமுரண்டொடை.

"ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரைகொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்."

இஃது அடிதோறும் அளபெடுத்தொன்றிவரத் தொடுத்தமையால் அடியளபெடைத்தொடை என வரும்.

இனி இணைமோனை முதலாகிய தொடை வருமாறு.

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
அரிற்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுத லரிவை
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே."

இதனுள் இணைமோனை முதலாகிய எழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

"பொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
அதனால்
இவ்வயின் இவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே."

இதனுள் இணையியைபு முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்த வாறு கண்டு கொள்க.

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழ றுன்னிய
மயிலேய் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணை யறிவுதொலைத் தனவே."

இதனுள் இணையெதுகை முதலாய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

"சீறடிப் பேரக லல்கு லொல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணு
மிருக்கையு நிலையு மேநதெழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தனை முனியா
தென்று மின்னணம் ஆகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே."

இதனுள் இணைமுரண் முதலான எழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

"தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போழு தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சேஒர் பாஅல்
மீஇ ஞாஅர்ந் துகளுஞ் சீஇர்
ஏஎ ருஉ நீஇ ணீஇர்
ஊஉரன் செய்த கேண்மை
யாய்வளைத் தோளிக் கலரா னதே."

இதனுள் இணையளபெடைத் தொடைமுதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. தொடை முற்றும். (ரு)

உறுப்பியல் முற்றும்.

உ-வது செய்யுளியல்.

சூ. ஆர்வெண்பா வகவல்கலி வஞ்சிப்பா நான்கி
னளவடிவெண் பாச்செப்ப லிசைமூச்சீ ரந்தங்
கூர்காசு பிறப்புநாண் மலர்முடிவீ ரடிவெண்
குறள்குறள்வெண் பாவிரண்டா மோராசீ ராசு
நேருகினுந் தனிச்சொற்பெற் றொன்றிரண்டு விகற்பம்
நேரிசைவெண் பாத்தனிச்சொ லின்றியடி நான்காய்ப்
பார்விகற்ப மொன்றுபல வின்னிசைவெண் பாவப்
படியடியீ ராறுவரும் பஃறொடைவெண் பாவே. (க)

என்பது, "ஆர்வெண்பா வகவல்கலி வஞ்சிப்பா நான்கின்" எ—து வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பா நான்காம். ஆரென்னும் விதப்பிறு வினமாவன:—தாழிசை, துறை, விருத்தம் எனவரும். அவை யாவன:—வெண்பா, வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் எனவும்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் எனவும்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் எனவும்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் எனவும் வரும். இவற்றிற்குதாரணம் முன்னர்க்காட்டுதும். "அளவடிவெண்பாச் செப்பலிசை மூச்சீரந்தங் கூர்காசு பிறப்புநாண் மலர்முடிவு" எ-து நான்கு பாவினுள் வெண்பாவாவது, அளவடியுஞ் செப்பலோசையும் முடிவிலடி மூச்சீருங் காசு பிறப்பு நாண்மலரென்னும் மூச்சீருள் முடிவிற்சீரும் பெற்று வருமென்பது—வெண்பாக்களுக்குப் பொதுவிலக்கணம். "ஈரடிவெண்குறள்" என்பது, இரண்டடியாய் வருவது குறள்வெண்பாவாம். "குறள்வெண்பா இரண்டா மோராசு மீராசு நேருகினுந் தனிச்சொற்பெற் றொன்றிரண்டு விகற்பம் நேரிசை வெண்பா" எ-து குறள்வெண்பா இரண்டாயோராசுபெற்று மீராசுபெற்றும், உம்மையாலோராசு மீராசும் பெறாதுமாய்; எடுத்த எதுகைக்கேற்ற தனிச்சொற்பெற்று ஒரு விகற்பமாகியு மிருவிகற்பமாகியும் வருவன நேரிசை வெண்பா; "தனிச்சொலின்றி அடிநான்காய்ப்பார் விகற்பமொன்று பல இன்னிசை வெண்பா" என்பது, தனிச்சொல்லின்றி நாலடியா யொருவிகற்பமும் பல விகற்பமுமாகி வருவன இன்னிசை வெண்பா. "அப்படி அடியீராறு வரும் பஃறொடை வெண்பா" என்பது இன்னிசை வெண்பாப்போலத் தனிச்சொல்லின்றி ஒருவிகற்பமும் பலவிகற்பமும் பெற்று ஐந்தடிமுதலாகப் பன்னிரண்டடியளவும்வருவன பஃறொடைவெண்பா. இவற்றிற்குதாரணம்:—

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபே
ருன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்."

இஃது அளவடியானுஞ் செப்பலோசையானும் வந்தமையால் வெண்பா.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
யாடமைத் தோழிக் கூடலு மணங்கே
யரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமும் மணங்கே."

இஃது அளடியானும் அகவலோசையானும் வந்தமையால் ஆசிரியப்பா.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி."

இது தரவு.

அடிதாங்கு மளவன்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே.

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுல்வையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே.

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே.

இவை மூன்றுந் தாழிசை:—

எனவாங்கு — தனிச்சொல்.

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்

பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

இது சுரிதகம்:—இஃதளவடியானுந் துள்ளலோசையானும் வந்தமையாற் கலிப்பா.

“சுறமறிவன துறையெல்லா
மிறவீன்பன வில்லெல்லா
மீன்றிரிவன கிடங்கெல்லாந்
தேன்றாழ்வன பொழிலெல்லா
மெனவாங்கு
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே.” எனவும்,

“தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
யென்னலத்தகை யிதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தொகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கென்னைப் பெரிதும்
கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே.” எனவும்,

இவை, குறளடிசிந்தடியானுந் தூங்கலோசையானும் வந்தமையால் வஞ்சிப்பா எனவரும்.

இனி வெண்பாவுக்கு வரலாறு:—

“அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு.”

இது காசெனமுடிந்தது.

“உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.”

இது பிறப்பென முடிந்தது.

“பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர்.”

இது நாளென முடிந்தது.

"பொன்னூர மார்பில்" இது மலரொன்றூடிந்தது. அடைவே கா பிறப்பு நாள் மலரெனவும் ஈற்றடிமூச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க.

இனி 'பாலொடுதேன்' எனவும், 'உருவுகண்டெள்ளாமை' எனவும, ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்தமையாற் குறள்வெண்பா.

"தடமண்டு தாமரையின் றாதா டலவ
னிடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைநொண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்" எனவும்,

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு" எனவும்,

இவை இரண்டு குறள் வெண்பா நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச் சொல்லாலடிநிரம்பி இரண்டு விகற்பத்தானு மொருவிகற்பத்தானும் வந்தமையால் இருகுறள் நேரிசைவெண்பா.

"கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்று மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்" எனவும்,

"வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ" எனவும்,

ஓரசையானும் ஈரசையானும் ஆசிட்டு இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வந்த இருகுறணேரிசை வெண்பா வந்தவாறு கண்டுகொள்க. இனி:—

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணாண்மேன் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்."

இது, நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி யொருவிகற்பத்தால் வந்த இன்னிசைவெண்பா.

"இன்னாமை வேண்டி னிரவெழுக வீங்கிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னூடு

ரேற்றந் தொழில்வடிவு தம்முட் டமொற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியர் கண்."

இஃது ஐந்தடியான்வந்த ஒரு விகற்பப் பஃறொடைவெண்பா.

"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவி
லென்னொடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னேடை நன்றென்றாள் நல்லளே பொன்னேடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்."

இஃது ஆறடியான் வந்த பல விகற்பப் பஃறொடைவெண்பா.

"வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்."

இது பல விகற்பத்தான் வந்த எழடிப்பஃறொடைவெண்பா:— (௬)

(எ) பலவடியா யளவிலவா யொரூஉவெதுகை யிரண்டா.

பாதங்க டொறும்பெறினும் வெள்ளடிகுன் றுவாங்
கலிவெண்பா நேரிசையின் னிசைபோன்மூன் றடியேற்
கருதப்பேர் சிந்தியலொப் பீரடிசெந் துறையீற்
றிலகடிகுன் றுதல்குறட்டா ழிசையடிமூன் றுய்ச்சிந்
நீற்றடியா யிறல்வெண்டா ழிசையடிமூன் றீறேழ்
குலவடியர் தங்குறையுர் வெண்டுறைநான் கடியுங்
கொண்டடிக டொறுந்தனிச்சொற்பரவல்வெளிவிருத்தம்.

'பலவடியாய் அளவிலவாய்' எ - து—பலவடிகளாலும் பஃறொடைவெண்பா முதலான வெண்பாக்கள்போல அடிவரையறுத்துச் சொல்லாமல் அளவிலாத அடிகளையுடைத்தாய்; "ஒரூஉவெதுகை யிரண்டாம் பாதங்க டொறும் பெறினும்." எ - து இரண்டாமடிகடோறும் தனிச்சொல்லாகிய ஒரூஉவெதுகையைப்பெற்றும்; "பெற்றும்" என்பதனால் ஒரூஉவெதுகை

பெருமலுமாம்; "வெள்ளடிகுன்றாவாங் கலிவெண்பா" எ-து—வெள்ளடிக்குச்சொன்ன இலக்கணங்களிற் குறையாமல் வருவது கலிவெண்பா; "நேரிசையின்னிசைபோன் மூன்றடியேற் கருதப்பேர்சிந்தியல்" எ-து—நேரிசை வெண்பாப்போலத் தனிச்சொற்பெற்றும், இன்னிசைவெண்பாப்போலத் தனிச்சொல்லின்றியும், மூன்றடியாய்வருமாயின் அவ்வப்பெயராலே நேரிசைச்சிந்தியல்வெண்பாவென்றும், இன்னிசைச்சிந்தியல் வெண்பா வென்றும்கொள்க. "பெயர் கருது" என்பதனுல், அவைபோல ஒரு விகற்பமும் பல விகற்பமும் கொள்க. "ஒப்பீரடி செந்துறை" எ-து—இரண்டடியுந் தம்முள் ஒத்துவருவது வெண்செந்துறை; "ஈற்றிலகடிகுன்றுதல் குறட்டாழிசை" எ-து—பலசீரா யீற்றடிகுறைந்து வருவது குறட்டாழிசை; இவ்விரண்டுங் குறட்பாவினம். "அடிமூன்றாய்ச் சிந்தீற்றடியாய் இறல் வெண்டாழிசை" எ-து—மூன்றடியாய் முடிவிலடி முச்சீராய் முடிவது வெண்டாழிசை. "அடிமூன்றீரேழ் குலவடி அந்தங்குறையும் வெண்டுறை" எ-து—மூன்றடி முதலாய் ஏழடியீறாய் முடிவிலடி குறைந்து வருவது வெண்டுறை. "நான்கடியுங் கொண்டடிகடோறுந் தனிச்சொல் பரவல் வெளிவிருத்தம்" எ-து—நான்கடியு மூன்றடியும்பெற்று அடிதோறு மிறுதியொருசொல் தனிச்சொல்லாய்வருவது வெளிவிருத்தம். உம்மையான் மூன்றடியுங் கொள்ளப்பெற்றது. உதாரணம்:—

> "சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
> மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
> கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
> நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
> ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
> யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
> யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
> யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
> தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
> வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
> டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
> வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
> னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
> தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
> கடைக்கணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
> செய்தானக் கள்வன் மகன்."

என்னும் பாட்டும் மடல்போல்வனபிறவுந் தனிச்சொல்லின்றி வந்த கலிவெண்பா:—

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்தல் நொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்"

என்னும் பாட்டுமுதலாயின போல்வன பிறவுந் தனிச்சொற்பெற்று வந்த கலிவெண்பா:—

"நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றம்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்" எனவும்,

"அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு" எனவும்,

இவை, மூன்றடியால் நேரிசை வெண்பாப்போல இரண்டாமடியினிறுதி தனிச்சொற் பெற்று இரு விகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வந்தமையால் நேரிசைச்சிந்தியல் வெண்பா.

"நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி" எனவும்,

"சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை." எனவும்,

இவை, மூன்றடியால் இன்னிசைவெண்பாப்போற் றனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வந்தமையால் இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

"முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடுப்பீன்ற போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்"

இதுவும் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" எனவும்,

"கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே."

இவை, ஒழுகியவோசையும் விழுமியபொருளும் பெற்று, இரண்டடியுந்தம் முள்ளொத்து வந்தமையால் வெண்செந்துறை.

"நண்ணுவார்வினை நையநாடொறு நற்றவர்க்கர சாயஞானநற்
கண்ணினுனடியே யடைவார்கள் கற்றவரே" எனவும்,
"நீலமாகடல் நீடுவார்திரை நின்றபோற் பொங்கிப் பொன்று மாங்கவை
காலம்பல் காலஞ்சென் றபின் செல்வர் யாக்கை கழிதலுமே" எனவும்,

இவை, பலசீரா யீற்றடிகுறைந் திரண்டடியாய் வந்தமையாற் குறட்டாழிசை. உரைத்தவிரண்டுங் குறட்பாவினமே.

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்."

இது, மூன்றடியா யீற்றடிமுச்சீராய்ப் பிறதளைவிரவி வெண்பாப்போல முடிந்தமையால் வெண்டாழிசை.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலேமேற் பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉ
நிழல்வரை நன்னடை னீப்பதே வல்லன்"

இது, நான்கடியா யீற்றடியிரண்டுஞ் சீர்குறைந்து வந்த ஒரொலி வெண்டுறை.

ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்." எனவும்,

"கொண்டல் முழங்கினவாற் கோபம் பரந்தனவா லென்செய்கோயான்
வண்டுவரிபாட வார்தளவம் பூத்தனவா லென்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யியைந்தகவி யேங்கினவா லென்செய்கோயான்."

எனவும், இஃதடிதோறும், நாற்சீராய் நான்கடியாலு மூன்றடியாலும் வந்து அடிதோறு மிறுதியிலே யொருசொல்லே தனிச்சொல்லாக வந்தமையால் வெளிவிருத்தம்.

(அ) பாவகவ லகவலிசை யளவடியீற் றயலிற்
பாதமுச்சீர் நேரிசையெவ் வடியுமள வொத்த
லருநிலைமண் டிலமிடைச்சீர் குன்றலிணைக் குறளா
மாதிநடு வந்தமுறி னடிமறிமண் டிலவா
சிரியமூன் றடியொத்த றாழிசைநான் கடியாய்ச்
சீரிடையிற் குறைதலிடை மடக்கலீற் றயலின்
மருவடிகை வதுதுறைநான் கடியொத்தா றாதி
வளர்சீர்கள் பலவருத லாசிரிய விருத்தம்.

என்பது:—"பாவகவ .....நேரிசை" என்பது, அகவலோசையு மளவடியையு முடைத்தாய் ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசை யாசிரியப்பா; "எவ்வடியு மளவொத்த லருநிலை மண்டிலம்" எ-து, எல்லாவடியுந்தம்முள் ளொத்துமுடிவது நிலைமண்டில வாசிரியப்பா; "இடைச்சீர்குன்றலிணைக் குறளாம்" எ-து இடையிடையே இருசீரடியானும் முச்சீரடியானும் வருவது, இணைக்குறளாசிரியப்பா; "ஆதி நடு வந்தமுறி னடிமறிமண்டில வாசிரியம்" எ-து, எல்லாவடியும் முதனடு விறுதியாக உச்சரித்தாலும் பொருள் ஒத்து முடிவது அடிமறி மண்டில வாசிரியப்பாவாம்; "மூன்றடியொத்தல் தாழிசை' எ-து, மூன்றடியுந் தம்முள்ளொத்து வருவது ஆசிரியத்தாழிசை; "நான்கடியாய்ச் சீரிடை குறைதலிடை. மடக்கலீற்றயலின் மருவடி கைவது துறை" எ-து, நான்கடியா யிடையிடை சீர்குறைந்து மிடைமடக்கியு மீற்றயலடிகுறைந்தும் வருவது ஆசிரியத்துறை; "நான்கடியொத்தாறாதி வளர்சீர்கள் பலவருத லாசிரியவிருத்தம்' எ-து, நான்கடியுந் தம்மொள்ளொத்து அடிகடோறும் அறுசீர்முதலான சீரையுடைத்தாய்வருவது ஆசிரியவிருத்தம். இவற்றிற்கு உதாரணம்:--

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி
யரிக்குரற் கிண்கிணி யாற்றுஞ் சீறடி
யம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
யகன்ற வல்குல் தந்துண் மருங்கு
லரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோ
ளவிர்மதி யனைய திருநுத லரிவை
யயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே."

இஃதீற்றயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா.

“ வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே ”

இஃது அளவடியாய் எல்லாவடியுந் தம்முள் ஒத்து வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா.

“நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே ”

*“சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
யருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ

* உரையாசிரியர், இதனைப் பதினேழடி யாசிரியமெனக் கொண்டு இதனுள் “ எழாமடியும் பன்னிரண்டாமடியும் மூச்சீரான் வந்தன; மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாகிய நான்கடியும் பதினைலாமடியும் ஐஞ்சீரான் வந்தன; இரண்டாமடியும் பதினொன்றாமடியும் ஆறுசீரான் வந்தன; ஏனைய நான்கு சீரான் வந்தன; இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று” என்றார் (தொல் செய்யுளியல். “ வெண்டளை விரவியும் ”என்பதனுரை.) நச்சினார்க்கினியர் “ இதனுள் “ நரந்த நாறுந் தன்கையால் ” எனவும் “ அருநிறத் தியங்கிய வேலே ” எனவும் தனித்துவந்தன; “ பெரியகட் பெறினே ” என்பது சொற்சீரடி. இதனைக் குறளடியாக்கிக் குறளடியும் வரும் என்பர் பின்பு நூல்செய்த ஆசிரியர் ” [யாப்பருங்கல விருத்திகாரர்] என்றனர். (தொல், செய், “ இடையும் வரையார் ” என்பதனுரை.)

யிரப்போர் கையுளும் போகிப் புரப்போர்
புன்கண் பாவை சோர வஞ்சொனுண் டேர்ச்சிப்
புலவர் நாவிற் சென்று வீழ்ந்தன்றவ
னருகிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனி, பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே"

இவை இடையடிக ளொருசீரு மிருசீருங் குறைந்துவந்தமையா லிணைக்குற ளாசிரியப்பா.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட னீவா லாறே"

இஃது எல்லாவடியும், முதனடுவிறுதியாக வுச்சரித்து, அடிமறிமண்டிலமா மாறு கண்டு கொள்க.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

இவை மூன்றடியா யொருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையால் ஆசிரியத்தாழிசை.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணனின் னிலைறகழ றொழுதனம்"

இது தனியேவந்த ஆசிரியத்தாழிசை

கொன்றார்ந் தமைந்த குருமுகத் தெழினிறக் குருதிக்
கோட்டின விருந்தாட் பெருங்கைக்
குன்றாமென வன்றாமெனக் குமுறா நின்றன
கொடுந்தொழில் வேழம்
வென்றார்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறை
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தா
ளதிரும் வாயென வெதிருங்கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி
சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலி புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப் புகையா நின்றன புலிமா னேற்
என்றாங்கிவையிவை யியங்கலினெந்திறத் [றை
தினிவரல்வேண்டலந் தனிவரலெனத்தலை
விலக்களிறுவரை மிசையெறிகுறும்பிடை
யிதுவென்னெனவது நோனார்கரவிர
விடைக்களவுளமது கற்றோரது கற்பன்றே.

இது நான்கடியாய் முதலடியும் மூன்றாமடியும் பதினான்கு சீராய் ஏனையடி யிரண்டும் பதினாறுசீராய் இடையிடை குறைந்துவந்த வாசிரியத்துறை.

“இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்”

இது நான்கடியாய் இடையிடை குறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

கரைபொரு கானயாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயி
னரையிருள் யாமத் தடுபுலி யேறஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ”

இது நான்கடியா யீற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

“இறைக்குமஞ்சிறைப்பறவைகள்”-இஃதறுசீர்க்கழி நெடிலடியான்வந் ஆசிரிய விருத்தம்.

“தணிகொண்டலர்ந்த” இஃதெழுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரியவிருத்தம்.

"இடங்கைவெஞ்சிலை வலங்கைவாளியின்"—இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரியவிருத்தம்.

"கொங்குதங்கு கோதையோதி மாதரோடு"—இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரியவிருத்தம்.

(கூ) ஆசிலிசை துள்ளலள வடிகலிப்பாத் தரவொன்
றடைவிற்று ழிசைமூன் றுந் தனிச்சொல்சுரி தகமா
மாசிலநே ரிசையொத்தா ழிசைக்கலிப்பா வளவே
மன்சிந்து குறளடித்தா ழிசைப்பின்பு வருமே
லேசிலம்போ தரங்கவொத்தா ழிசைக்கலிப்பா விவற்றோ
டிடையரா கம்வரில்வண் ணகவொத்தா ழிசையே
பேசியவெண் பாவியைந்து சிந்தடியீற் றடியாய்ப்
பிறதளைதன் றளையோசை பெறுவதுவெண் கலிப்பா.

"ஆசிலிசை துள்ளலளவடி கலிப்பா" எ-து, துள்ளலோசையினையு மளவடியினையு முடையது கலிப்பா; "தரவொன் றடைவிற்று ழிசைமூன் றுந் தனிச்சொல்சுரிதகமா மாசிலநேரிசையொத்தாழிசைக்கலிப்பா" எ-து, தரவொன்றும் தாழிசைமூன் றுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமாய் வருவது நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா; "அளவே மன்சிந்து குறளடித்தாழிசைப் பின்பு வருமேல் ஏசில் அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா" எ-து, முன்போலத்தரவுந் தாழிசையும்,பின்பு நாற்சீரடியானு முச்சீரடியானும் இருசீரடியானும் வந்து அம்போதரங்கமு முடைத்தாய்த் தனிச்சொல்லுஞ்சுரிதகமும் பெற்று வருவது அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா: "இவற்றோடிடைஅராகம் வரில் வண்ணகவொத்தாழிசையே" என்பது,இந்த அம்போதரங்க வுறுப்பையுமுடைத்தாய்த் தாழிசைக்குமம்போதரங்கத்துக்கு மிடையே அராகவுறுப்பைப்பெற்று வருவது வண்ணக வொத்தாழிசைக்கலிப்பா. "பேசியவெண்பாவியைந்து சிந்தடியீற்றடியாய்ப் பிறதளைதன்றளையோசை பெறுவது வெண்கலிப்பா" என்பது, வெண்பாவினடைத்தாயீற்றடிசிந்தடியாய்த் தன்றளையாகிய கலித்தளையையும் பிறதளையையும் பெற்றுக்கலியோசையினையுடைத்தாய் வருவது வெண்கலிப்பா:—இவற்றிற்குதாரணம்

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெருங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ" இது தரவு.
சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வெம்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே.

சேனுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நலமிலரே.

சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே என்பவால்
புலம்படைந்த நலந்தொலையப் போவரோ பொருளிலரே. இவை மூன்
என வாங்கு—தனிச்சொல். [றுந் தாழிசை.

அருளொனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே" இது சுரிதகம்.

இது, தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்று மிரண்டடியாய்த் தனிச்சொற்பெற்று மூன்றடியாசிரியச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புனல் இழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்" இது தரவு.

"மூரைசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ.

கலியொலி வியனுலகங் கடந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்த்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுயர் நெடுவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ.

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவி லிறுத்ததுநின் னிகலாமோ.
[இவைமூன்றுந் தாழிசை.

இலங்கொளி மரகத வெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்.

விரியிணர்க் கோங்கமும் வெங்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை. இவை பேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை.
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை.
யொலியிய லுவண மோங்கிய கொடியினை.
வலிமிகு சகட மாற்றிய வடியினை. இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ; புணர்மருதம் பிளந்தோய் நீஇ;
நீரகல மளந்தோய் நீஇ; நிழறிகழும் படையோய் நீஇ. இஃதிடையெண்.

ஊழி நீஇ; உலகு நீஇ; உருவு நீஇ; அருவு நீஇ;
ஆழி நீஇ; அருளு நீஇ; அறமு நீஇ; மறமு நீஇ; இவை சிற்றெண்.

என வாங்கு—தனிச்சொல்.

அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
றொன்றுமுதிர் கடலுலக முழுதுட
னொன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே—இது சுரிதகம்.

இஃது எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டவை குறைந்து முச்சீரடி நான்கும்இருசீரடியெட்டுமாய்வந்த அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா. எட்டும் பதினாறுமென்பன குறையாமல் வந்தவாறு யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க.

"விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பருஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி லெரிகுஞ்சிக்
குருஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள். இது தரவு.

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் காவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
வணிநலந் தனியேவர் தருளுவது மருளாமோ.

அன்பினா லமுதளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்

சிதம்பரப்பாட்டியல்

பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாக்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ.
பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத காவினையுந் தெளியாத விருளிடைக்கட்
கூடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ. **இவைமூன்றுந்தாழிசை.**

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவன பொழில்.
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி.
தீதுறு திறமறு கெணநனி துணையொடு சினமொடு பிணைவன துறை.
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கழிதொடர் புடையது கடல்.

இவை நான்கும் அராகம்.

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனு
விடுங்கழி யிராவருதல் வேண்டாமென் றுரைத்திலமோ.
கருநிறத் தெறுழ்வலிக் கராம்பெரி துடைமையா
விருணிறத் தொருகான விராவார லென்றிலமோ.

நாற்சீரடியி ரண்டபோதரங்கம்.

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே.
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே.
ஆற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே.
நயப்பொடு கழிந்தன்றா னனவிலும் நன்னுதற்கே.

இவை, நாற்சீரோரடி **நான்கம்போதரங்கம்.**

அத்திறத்தா லசைந்தன தோள்; அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்த முகம்; பொன்னிறத்தாற் போர்த்த முலை;
அழலினா லசைந்த நகை; அணியினா லொசிந்த திடை;
குழலினா லவிர்ந்த முடி; குறையினாற் கோடிற்று நிறை;

இவை, முச்சீரோரடி எட்டம் போதரங்கம்.

உட்கொண்ட தகைத்தொருபால்; உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்ட றுளித்தொருபால்; கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉந் தகைத்தொருபால்; படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்; இளிவந்த வெழிற்றொருபால்;
மெலிவுறூஉந் தகைத்தொருபால்; விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்; பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்; கட்படாத் துயரொருபால்;
எதிலர்ச்சென் றணைந்தொருபால்; இயனாணிற் செறிவொருபால்;

இவை இருசீரோரடி பதினாறம்போதரங்கம்.

எனவாங்கு—தனிச்சொல்.

இன்னதிவ் வழுக்க மித்திற மிவணில
மென்னவு முன்னாட் டுன்னா யாகிக்
கலந்தவ ணிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிசநும் புணர்ச்சி தானே" இது சுரிதகம்.

இது, தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமெனும் ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

"வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வான்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையால்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசான் றிருகுணத்துத் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.

இது, கலித்தளைதட்டுக் கலியோசை தழுவிவந்தமையால் வெண்கலிப்பா.

"ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியென்
றார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து

இஃது ஆசிரியநிரையசைத் தளையான் வந்த வெண்கலிப்பா.

(௩௦). பெறுதரவு தனிணையே சிலபலதாழிசையாற்
பிறழ்விலவு மயங்கினவு மப்பெயர்க்கொச்சகமாம்
இறுதிநீண் டளவொத்தல் பல்லடிதாழிசையே
யெழிலிலஞ்சீ ரடிநான்கு கலித்துறைநே ரடிநான்
குறுதல்கலி விருத்தமிசை தூங்கலடி குறள்சிந்
தொடுதனிச்சொற் பெற்றகவ லிறும்வஞ்சி யிருசீர்
முறையடிநான் கொருமூன்று தாழிசையாங் கவற்றோன்
றூர்ந்துறைமுச் சீரடிநான் காம்வஞ்சி விருத்தம்.

என்பது "பெறுத்தரவு தரவிணையே..........கொச்சகமாம்" எ-து; தர வொன்றே வந்தால் தரவுக்கொச்சகக் கலிப்பா எனவும், தரவிரண்டாய் வந்தால் தரவிணைக்கொச்சகக் கலிப்பா எனவும், சிலதாழிசை வந்தால் சிஃறாழிசைக்கொச்சகக் கலிப்பா எனவும், பலதாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், பலவடியு மயங்கிவந்தால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும் பெயராம். "இறுதிநீண் .....தாழிசையே" எ-து, பலவடியாய் எல்லாவடியுந் தம்முளளவொத்து ஈற்றடி நீண்டுவருவது கலித் தாழிசை. "எழில் 'ஐஞ்சீர்.....கலித்துறை" எ-து, ஐஞ்சீரால்வரும் நாலடி யையுடையது கலித்துறை. "நேரடிநான் குறுதல் கலிவிருத்தம்" எ-து, நாற்சீர் நாலடியாய் வருவது கலிவிருத்தம். இனி, வஞ்சிப்பாவுக்குவராலாறு; "இசை தூங்கலடி......அகவலிறம் வஞ்சி" எ-து, தூங்கலோசையினையுடைத்தாய்; இருசீரடியினையும் முச்சீரடியினையு முடைத்தாய்த் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது வஞ்சிப்பா. 'குறள்சிந்தொடு' என்னும் விதப்பினால், குறளடிவஞ்சிப்பாவென்றும் சிந்தடிவஞ்சிப்பாவென்றும் பெயருடன் வழங்கும் என்க. "இருசீர் அறையடி... ..தாழிசை" எ-து இருசீர் நாலடியாய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவருவது வஞ்சித்தாழிசை. "ஆங்கவற்றொன் றுந்துறை" எ-து அந்தத்தாழிசையொன்று தனியே வருவது வஞ்சித்துறை. "முச்சீரடி நான்காம் வஞ்சிவிருத்தம்" எ-து, முச்சீர் நாலடியாய் வருவது வஞ்சிவிருத்தம். எ-று. இவற்றுக்கு முறையே உதாரணம் வருமாறு:—

"செல்வப்போர்க்கதக் கண்ணன்.......மருமம்பாய்ந்தொளித்ததே."

இது, சுரிதகமில்லாத தரவுகொச்சகக் கலிப்பா.

"குடநிலைத் தண்புறவிற் கோவலரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையுறாஉ மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனந் தோன்றப்போய்க்
கலையினொடு முசுவிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
எனவாங்கு—
ஆனொடு புல்லிய பெரும்பூதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

இது தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தானிற்ற தரவு கொச்சகக்கலிப்பா.

"வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறுமலைந்தார்க் காவலர்க்குங் காவலனாம்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே"—இது தரவு;

எனவாங்கு—தனிச்சொல்;
துணைவளைத்தோ ளிணைமெலியத் தொன்னலந் தொடர்ப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ—இது தரவு.

அதனால்—தனிச்சொல்.
செவ்வாய்ப் பேதை யிவ்விறத்
தெவ்வா றாங்கொலிஃ தெண்ணிய வாறே"—சுரிதகம்.

இஃது, இடையிடை தனிச்சொற்பெற்றுச் சுரிதகத் தாலிற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா. இனிச் சுரிதகமில்லாததூஉம் வந்தவழிக் கண்டுகொள்க.

"பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பார்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே-இது தரவு.
ஆங்கொருசார்
உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினரே.
ஆங்கொருசார்
ஆக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.
ஆங்கொருசார்
பால்கொண்ட புகைதணிப்பான் மாக்கடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே.
அதா அன்று [இவைமூன்றுந் தாழிசை.
கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
இன்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே"—இது சுரிதகம்.

இஃது, இடையிடையே தனிச்சொற்பெற்று, நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தன்றளையான் வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

"தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையி னிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ—இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேற்
றளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
பிணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நன்னுதலைப் பிரிவாயே
லோம்பிரியே மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியநான்
றன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.
சில்பகலு மொழியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.
எனவாங்கு—தனிச்சொல். [இவையாறுந் தாழிசை.

அரும்பெற லிவளினுந் தருப்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
அதனால்—விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே"—இது சுரிதகம்.

இது, நான்கடித்தரவும் ஈரடித்தாழிசையாறும் தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமுமாய் வந்தமையாற் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்ன
மிரைநயந் திறைகூரு மேமஞ்சா றுறைவகேள்.

இலையெனு மழையென மஞ்செனத் திரைபொங்கித்
தனலெனக் காற்றெனக் கடிதுவுந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பெயர்ந்தோடு மேமஞ்சா றுறைவகேள்.
இவையிரண்டுந் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோ
டொடிநெகிழ்ந்த தோள்கண்டு முறவலனே என்றியால்;
கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோ
டெண்பணிக ளுகக்கண்டு நிரியலனே யென்றியால்;
நீர்பூத்த நிரையிதழ்க்கண் ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;
கனைவால்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;
வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்;
கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைந்துணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.
அதனால்—தனிச்சொல். [இவை யாறுந் தாழிசை.
அடும்பம லிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;
செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;
அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;
அலங்கொளி ரவிர்சுட ரிலங்கொளி மறைதொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில். இவை நான்கும் அராகம்.
விடாஅது கழலுமென் வெள்வளையுஞ் செறிப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.
ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
தாங்காது கழலுமென் றகைவளையுஞ் செறிப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
மறவாத வன்பினேன் மனநிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்.
காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
யேதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.
இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.
எனவாங்கு—தனிச்சொல். [இவையாறுந் தாழிசை.

பகைபோன் றதுதுறை, பரிவா யினகுறி
நகையிழந் ததுமுக, நனிநா ணிற்றுளந்
தகையிழந் ததுதோ, டலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய், பொறையாகின் றென்னுயிர்.

இவை இருசீரோரடியெட்டம் போதரங்கம்.

அதனால்— தனிச்சொல்.

இனையது நிலையா லினையது பொழுதா
னினையல் வாழி தோழி துனைவாற்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே".

இது, தரவிரண்டுந் தாழிசையாறும் தனிச்சொல்லும் அராகம் நான்கும் பெயர்த்தாறுதாழிசையும் தனிச்சொல்லும் எட்டம்போதரங்கவுறுப்பும் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று நான்கடியாய் ஈற்றுக்கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இனியாசிரியத்தினோடும் வெண்பாவினோடும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வருமாறு:—

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
யருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையனே;
அவனுந்தான், ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக னாடன் மகன்;
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்றொடா
கொல்லை குரல்வாங்கி யீனா மலைவாழ்ந
ரல்ல புரிந்தொழுக லான்;
காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

எனவாங்கு,

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;
அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை;
தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;
நல்லாய், நன்னா டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ;
விண்டோய்கன் னாடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;
மைதவழ் வெற்பன் மணவணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ;
என்னைமன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்;
நெய்த லிதழுண்கண், நின்கண்ணா தென்கண் மன்;

எனவாங்கு,

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே.”

இஃது, ஆசிரியத்தினானும் வெண்பாவினானும்வந்த மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

"கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;
ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;
மென்றினை காத்து மிகுபூங் கமழ்கானற்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்;"

இவை யிரண்டடியா யீற்றடி மிக்கு ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையாற் கலித்தாழிசை.

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழாஅல்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழா தாய்க் குருலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்."

இஃதீற்றடி மிக்கு ஏனையடி மூன்று மொத்துவந்த கலித்தாழிசை.

"பூண்ட பறையறையப் பூதமருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே."

இஃது ஈற்றடிமிக்கு இரண்டாம்அடி குறைந்து முதலடியும் மூன்றும் அடியுமொத்துவந்த கலித்தாழிசை.

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே" எனவும்,
"வென்றான் வினையின்" எனவும்,

இவை ஐஞ்சீர் நான்கடியாய் வந்தமையாற் கலித்துறை.

"வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னாய்தலி னொண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்" எனவும்,

"தேம்பழுத் தினியநீர் மூன்றும்" எனவும், நாற்சீரடியால் வந்தமையாற் கலிவிருத்தம்.

இனிவஞ்சிப்பாவுக்குவரலாறு:-

"பூந்தாமரைப் போதலமர......"

இது நாளென்னுந் தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா.

கொடியவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுழையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
யெயினவெ ணினிதிருந் தெல்லார்க்கும்
பயில்படுவினை பத்தியினாற் செப்பியோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.

இது, "புணையென" என்னுந்தனிச் சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தா லிற்ற சிந்தடிவஞ்சிப்பா.

"தொன்னலத்தின்" என்பது, "பெரிதும்" என்னுந் தனிச்சொற்பெற்றது. இதுவுமது.

மதப்பிடியை மதவேழந் தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தோர்க்கே நடக்குமென் மனனேகாண்;
பேடையை யிரும்போத்துத் தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தோர்க்கே யோடுமென் மனனேகாண்;
இரும்பிடியை யிகல்வேழம் பெருங்கையான் வெயின்மறைக்கு
மருஞ்சுர மிறந்தோர்க்கே விரும்புமென் மனனேகாண்.

இவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையால் வஞ்சித்தாழிசை.

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்" என்பதும்,

"திரைத்தசாலிகை" என்பதும், இருசீர்நான்கடியாய்வந்த வஞ்சித்துறை.

"சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயி
னீல வுண்கணிவள் வாழுமே" என்பதும்,
"இருதுவேற்றுமையின்மையால்" என்பதும்,

இவை முச்சீர் நான்கடியாய்வந்த வஞ்சிவிருத்தம். (சo)

வஞ்சியினமுற்றும்.

ஒழிபியல்.

ஆந்தளைசீர் கெடிலிகர வுகரத்தேய் வொற்று
மாமலகு பெறுவளவை யௌக்குறுமைக் குறிலா
மேய்ந்தவுயி ரோரளபு மீரளபு மாகி
யீரசையா மூவசையா மொற்றளபு குறினேர்
சேர்ந்தசையா மொற்றிலையே லொற்றாமொற் றளவாஞ்
செறிவிலீ ரொற்றுமூ வொற்றுமொரொற் றாமுன்
சார்ந்தகுறில் விட்டிசைக்கி னேராம்வெண் பாவெண்
டளையலது தயங்காது மயங்கிடுமெப் பாவும்.

என்பது சூத்திரம். "ஆந்தளைசீர்கெடிலிகரவுகரத்தேய்வொற்றுமாம்." என்பது, தளையுஞ்சீருங் கெடவந்தவிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஒற்றாம்; உம்மையால் ஒற்றல்லாமலுமாம்; "தளைசீர்கெடி"லென்பதனை முதனிலைத்தீபமாக்கிக்கொள்க; மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். "அலகுபெறுவளவு" எ-து, உயிரளபெடை ஒரோவிடங்களிலே நீக்கப்படும். "ஐ ஔக்குறுமைகுறிலாம்" எ-து, ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும் குற்றெழுத்தாம்; "எய்ந்தவுயிரோரளபு மீரளபுமாகி யீரசையாமூவசையாம்" எ-து, உயிரளபெடையானது, ஓரளபெழுந்தால் ஈரசையாம்; ஈரளபெழுந்தால் மூவசையாம்; "செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபும், ஐயப்பா டின்றி யணையுமாம்-மைதீரொற், றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்குங், குன்றுமே லொற்றளபுங் கொள்" என்றார் பூதபுராணமுடையாரும். "ஒற்றளபுகுறினேர், சேர்ந்தசையாம்' எ-து, ஒற்றளபெழுந்தாற் குற்றெழுத்தாம்; அன்றி முன்னின்றவெழுத்துடனே கூடி நிரையசையாய் நில்லாது குற்றெழுத்தின் மாத்திரையைப்பெற்று, நேரசையாகவே நிற்கும்; "ஒற்றிலையேலொற்றா மொற்றளபாம்" எ-து, ஒற்றில்லாதவிடத்து ஒற்று உண்டாக்கலாம்; அந்தவொற்றிலு மமைதிபிறவாதபோது தோற்றினவொற்றையே யளபாக்கலாம்; 'மைதீரொற்றின்றியும் செய்யுட்கெடினொற்றையுண்டாக்குங் - குன்றுமேலொற்றளபுங்கொள்' என்பதனுட்கண்டுகொள்க. 'செறிவிலீரொற்று மூவொற்றுமோரொற்றாம்' எ-து, அந்நியமாய் ஈரொற்றுவந்தாலும், மூவொற்றுவந்தாலு மோரொற்றாகவே நிற்கும்; "ஈரொற்றாயினு மூவொற்றாயினு, மோரொற்றியல வென்மனார் புலவர்" என்னு மிதனுட்காண்க. "முன்சார்ந்த குறில்விட்டிசைக்கில்நேராம், எ-து, ஆதியிலேவிட்டிசைத்துக்குற்றெழுத்துவந்தால் நேரசையாம்; "வெண்பாவெண்டளையலதுதயங்காது மயங்கிடுமெப்பாவும்" எ-து, வெண்பாவுக்கு வெண்

டளெயொழிந்து வேற்றுத்தளைவாராது;மற்ற மூன்றுபாக்களுக்கும் எல்லாத் தளையுமயங்கியும் வழங்கும்; இவையாப்பருங்கலத்துட்காண்க.

"வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுது மியல்புமா—மேய்ந்த
விறுதி வருமெழுத்தா மீராறு மோரோர்
மறுவில் பதங்கெட்டு வரும்".

இவ்வெண்பாவினுள்ளுங் குற்றுகரந்தள்ளச் சீர்சிதையாது. "தடமண்டு" என்பதனுட் குற்றுகரமொற்றலாதவாறு கண்டுகொள்க.

"பல்லுக்குத் தோற்ற பணிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவா—னெல்லுக்கு
நூறேஒநூ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறேமா லன்றளந்த மண்" எனவும்,

"இடைநுடங்க வீங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையி
னுப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு".

என்பவற்றில், நூறேநூறெனவும், உப்போவெனவும், பண்டமாற்றின் கண்வந்த அளபெடையை நீக்கி, நெட்டெழுத்தாகவேகொள்ளச் சீர்சிதையாது.

"அன்னையையா னோவ தவமா லணியிழாய்
புன்னையையா னோவன் புலந்து." எனவும்,
"பிறிந்த விருந்த பெருமா னுரையை
யறிந்தேன் மௌனமொழி யால்" எனவும்,

ஐகாரக்குறுக்கமும் ஔகாரக் குறுக்கமுங் குற்றெழுத்தானவாறுங் காண்க.

"எள் சிதைய வழாஅஅ லெலாநின்
சேயரி சிந்திய கண்" எனவும்,
"உறாஅஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு" எனவும்,

ஓரளபெடையு மீரளபெடையும் வந்தவாறு காண்க.

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலா
ளென்ன் பிறர்மகளா மாறு." எனவும்,

"அம்ம் பவள்ள் வரிநெடுங் கண்ணுய்வஞ்சிக்
கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கி
னரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்."
"எஃஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃஃகு வார்க்கில்லை வீடு." எனவும்,
ஒற்றளபெடை ஒருமாத்திரைபெற்று நேரசையாயினவாறு காண்க.

"அம்பொரைந்துடையகாமனை யனென்னவந்தன
னம்புநீரல்லர்நன் குரங்குநீராயினுந்
தங்குரவ்வர்தாங்கொடுப்பினெஞ்சுநேர்ந்துதாழ்வர்தாம்
பொங்கரவவல்குலாரெனப்புகன்றுசொல்லினுர்"

என்பதனுள், "குரவ்வரென" ஒற்றில்லாதவிடத் தொற்றுண்டானது கண்டு கொள்க. "பீலிமஞ்ஞை நோக்கி" என்பதனுள் ஒற்றில்லாதுதோற்றின ஒற்றே அளபானது கண்டு கொள்க.

"கார்க்கடல், "பேய்க்குணவு" என்பவற்றுள் அங்ஙனமான ஈரொற்று மோரொற்ருயினவாறு காண்க.

"உண்ணுமென்ளிநிருன்" எனவும் "அ அவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால், எவனை வெல்வா ரிகல்" எனவும்,

"எவல் குறிப்பே தற்சுட் டல்வழி, யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா" என்பதனல், முதற்சுட்டனிக்குறில் நேரசையாயினவாறு காண்க.

"குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு நேர்மணன்மே னின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிற
ருள்ளம் புகாப்புதுரை."

என்பதனுள், வெண்பா சீர்தளை சிதைந்தவாறு காண்க.

'குடநிலைத்தண்புறவில்' என்னுங்கலிப்பாவினுள்ளுமற்றுங்கொச்சகக் கலிப்பாவினுள்ளு மாசிரியவுரிச்சீரும், வெண்சீரும், வஞ்சியுரிச்சீரும்வந்து, வெண்டளையு மாசிரியத்தளையுங் கலித்தளையும் வஞ்சித்தளையு மயங்கிவந் தமை கண்டுகொள்க.

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவ
னுண்டுசிலம் பேறி யோங்கிய விருங்கழை

படிந்தமாக் களிறு பயிற்று மென்ப
மடியாக் கொலைவில் லென்னையர் மலையே.

இவ்வாசிரியத்துட் டன்சீரும் வெண்சீரும் வஞ்சிச்சீரும் விரவி வந்தவாறு கண்டுகொள்க.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரும் வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும்." எனவும், "தொன்னலத்தின்" எனவும் வஞ்சிப் பாக்களுள்ளும் பிறவற்றுள்ளும், வெண்சீரும் தன்சீரு மாசிரியச் சீரும்விரவி வெண்டளையுந் தன்றளையுங் கலித்தளையு மாசிரியத் தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க. (கக)

(கஉ) மயங்குமடி யெப்பாவும் வெண்பாவுக் கன்றி
மன்னினமுந் தளையுமயங் கிவரும்அஆ ஐஔ
நயங்கொள்ளும் இஈஎ ஏஉஊ ஒஓ
ஞணநம வசதவெனு மோனைமெய்யு மோனை
யியங்குமின நெடில்வருக்கம் வரிலெதுகை மோனை
யரலழவொற் றுசிடையிட் டியிருமிரண் டடியுந்
தயங்கியமூன் றுமெழுத்து மெதுகைகடை யிணைபின்
சார்கூழை யிடைப்புணரு முரண்டொடைக்குஞ் சாற்றே.

எ - து. சூத்திரம். "மயங்குமடி யெப்பாவும் வெண்பாவுக் கன்றி" எ-து எல்லாப் பாக்களுக்கும் ஒருபாவிலடி ஒருபாவிற்புக மயங்கும்; வெண்பாவில், வேற்றுப்பாவினடி வாராது ; "மன்னினமுந் தளையும் மயங்கிவரும்" எ - து, தாழிசை, துறை, விருத்தம் என்று சொல்லப்பட்ட நாலு பாவினங்கட்கும் இன்னதளையென்னு நியமமில்லாமல் மயங்கிவரப்பெறும்; தளையுமென்ற உம்மையால் அடியுமயங்கப்பெறும் ; "அஆஐஔ, நயங்கொள்ளும் இஈஎஏஉஊஒஓ, ஞணநமவசத வெனுமோனை" எ - து, அஆஐஔ எனவும், இஈ எஏ எனவும், உஊ ஒஓ எனவும், ஞணநமவ எனவும் சத எனவும் வரும் ; இவை தம்முள் ஒன்றுக்கொன்று அனுவாக வந்த[redacted]ால லுமோனையாம்; "மெய்யுமோனை" எ-து, ஆதியிலே உயிர் நின்றாலும்மெய் நின்றாலும் நின்றவடியேமோனையாய் வரில் மெய்ம்மோனையாம். "இயங்குமினநெடில்வருக்கம் வரிலெதுகை மோனை" எ - து, இனவெழுத்தேவந்தா

லினவெதுகையென்றும் இனமோனையென்றும், நெடிலெழுத்தே வந்தால் நெடிலெதுகையென்றும் நெடின்மோனையென்றும், வருக்கவெழுத்தே வந்தால் வருக்கவெதுகையென்றும் வருக்கமோனையென்றும் பெயர். இனமென்றது, வல்லின மெல்லின மிடையினம். "யாலழ வொற்றுாசிடை யிட்டிரு மிரண்டடியுந், தயங்கிய மூன்றாமெழுத்தமெதுகை" எ - து, "யாலழ வென்னு மீரிரண் டொற்று, வான்முறை பிறழாது வந்திடை யுரப்பி, ஞாசிடை யெதுகையென் றறியல் வேண்டும்" எனக் கண்டு கொள்க. இடையிட்டெதுகை வந்தால், இடையிட்டெதுகையாம். எதுகையிலே யுயிர்வந்தாலுயிரெதுகையாம். இவ்விரண்டடி யொவ்வோர் எதுகை வந்தாலிரண்டடி யெதுகையாம். மூன்றாமெழுத்தடிதோறும் வந்தால், மூன்றாமெழுத்தொன்றெதுகையாம். "கடையிணை பின்சார் கூழையிடைப்புணரு முரண்டொடைக்குஞ் சாற்றே" எ - து, கடைமுரணுங் கடையிணை முரணும் பின்முரணுங் கடைக்கூழை முரணும் இடைப்புணர்முரணும் எனவரும். அவையாவன :— நாலாஞ்சீர் முரணுதல் கடைமுரண். நாலாஞ்சீரு மூன்றாஞ்சீரு முரணுதல் கடையிணைமுரண். நாலாஞ்சீரு மிரண்டாஞ்சீரு முரணுதல் பின்முரண். முதற்சீரொழித்த மூன்றுசீருமுரணுதல் கடைக்கூழைமுரண். இரண்டாஞ்சீரு மூன்றாஞ்சீரு முரணுத லிடைப்புணர்முரண் எனவரும். இனியுதாரணம்:—

"அங்கண் மதிய மாவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யொன்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே."

இவ்வாசிரியத்துள், "அங்கண் மதிய மாவின்வாய்ப் பட்டெனப், பொங்கிய பூசல் பெரிது" என வெள்ளடியானவாறும்;—

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலை நடுவணத் திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவ
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே

கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

இவ்வாசிரியத்துள் "உப்பிலாஅ வவிப்புழுக்கல்" எனவும் "கைக்கொண்டு பிறக்குநோக்காது" எனவும், "இழிபிறப்பினோ னீயப்பெற்று" எனவும், வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க.

"குருகுவெண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சுர
லருளா னாகுத லாயிழை கொடிதே."

இவ்வாசிரியத்துள், "மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது, தீ வழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றுழலுமே" என உச்சரித்துக் கலியடி யாமாறு கண்டுகொள்க.

"நேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை."

என்னுமிவ்வஞ்சிப்பா ஆசிரிய அடியாயினவாறும்,

"வயலாமைப் புழுக்குண்டு வறளடும்பின் மலர்மிலைந்து
கயனாட்டக் கடைசியர்தங் காதலர்தோள் சேர்ந்தனரே."

எனக் கலியடியாமாறும் கண்டுகொள்க. வஞ்சிப்பாவினுள் வெள்ளடி வருமாறும், கலிப்பாவினுள் மற்று மூன்று பாவடியும் வருமாறும் "யாப்பருங்கலவிருத்தி" யுட் கண்டுகொள்க. தாழிசை, துறை, விருத்தம் என்றுசொல்லப்பட்ட நாலுபாவினங்களுந் தளைமயங்கி வருதற்கு உதாரணம் முன்னர்க் காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. அனுமோனைக்கும், மெய்ம்மோனைக்கு முன்னர்க் காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. இனவெதுகை மூன்றுவன;—

"தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்."

இது வல்லினவெதுகை.

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு."

இது மெல்லினவெதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

இஃது இடையினவெதுகை.

"ஆஆ என்றே.........ஒருசாரார்" இது நெடிலெதுகை.

"நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதுதிப்
பாடுவண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லாப்
பாடமை சேக்கையுட் கண்"

இது வருக்கவெதுகை.

இனி மோனைவருமாறு; இவற்றுள், இனமோனை மூன்றுவன:—

"கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழிய ரைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉ.ம் பொழுதே."

இது வல்லினமோனை.

மெல்லினமோனையு மிடையினமோனையும் வந்தவழிக் கண்டுகொள்க.

"ஆர்கலி யுலகத்து" என்பது நெடின்மோனை.

"பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நகைஇப்
பூந்தார் மார்ப புனத்துட் டேன்றுப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழுங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொருதுசினந் தணியாப் பூணுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாட்

"தோடா ரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக ரூறும் பைப்பயப் பெருக
நீடா ரிவரென நீண்மணங் கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ மறன்முகந் தெழிலி
பருவம் பெய்யாது வலனேர்பு வளைஇ
வோடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே"

இஃது, இடையிட்டு வந்தமையால் இடையிட்டெதுகை.

"துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநா
ளணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலவயி னேந்தி
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே."

இஃதிரண்டா மெழுத்தின் மேலேறின உயிரொன்றி வந்தமையால் உயிரெதுகை.

"துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளி
ரவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்த
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலி
னணங்கு மழுதழு மந்நலார் பாடல்."

இது, முன்னிரண்டடியுமோரெதுகையாய்ப் பின்னிரண்டடியும் வேறோரெதுகையாய் வந்தமையால் இரண்டடியெதுகை.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

இது, மூன்று மெழுத்தெதுகை.

"கயன் மலைந்தன்ன கண்ணிணை கரிதே
தடமுலைத் திவளுந் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சிறிதே
யாடமைத் தோளிக் கல்குலோ பெரிதே."

இஃதடிதோறுங்கடைச்சீர்மறுதலைப்படத்தொடுத்தமையாற்கடைமுரண்.

'மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
றேரோ காண்கலங் காண்டும்
பீரோர் வண்ணமெஞ் சிறுநுதற் பெரிதே."

இஃதடிதோறுங் கடைச் சீரிரண்டும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடையிணைமுரண்.

"சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
னலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ நீதே."

இஃதடிதோறும் முதற்சீர்க்குப்பின்னும் மூன்றாஞ்சீர்க்குப்பின்னும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் பின்முரண்.

"காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடிப்
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே."

இது, முதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத்தொடுத்தமையாற் கடைக்கூழைமுரண்.

"போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்குவெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பைங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறா ரிழிதரு நலங்கவர்ந்
தின்னு வாயின வினியோர் நாட்டே."

இஃதிடையிருசீரும் மறுதலைப்படத்தொடுத்தமையால், இடைப்புணர் முரண். முரண்டொடைக்குமென்றவும்மையால் ஒழிந்தொடைக்குமவ் வாறே கொள்க. (௧௨)

(௧௩) சாற்றெல்லை கட்குநெடி லடியாதி மோனை
சாரெழுவா யெழுத்துமலா தநுமோனை விதியாற்

றேற்றெதுகை மோனையுடன் வரிற்சிறப்பெத் தொடையுஞ்
சீரிடையீ ரறுவும்வருந் தொடைகள்பல தளைகள்
தோற்றின்முதல் வந்ததொடை யாற்றளையாற் பெயராஞ்
சுருங்குதா ழிசைதரவிற் றரவடிமூன் றிழிபே
யேற்றபா விரண்டேவெண் பாவகவல் வெண்பா
விடத்தில் வருங் கலியகவ லிடத்தில்வரும் வஞ்சி.*

(௧௪) இறுகுறளின் சிதைவுஞ்செந் துறையிழிபுங் குறட்டா
ழிசையாம்வேற் றொலிவரினும் வெண்டுறையொற் றெண்ணு
தறையடிநேர் பதினாறு நிரைபதினே ழெழுத்தா
யடிநான்கு தொறும்வரிற்கட் டளைக்கலித்து றையே
யுறுபொருள்சூத் திரங்குறித்த யாப்பிற்றாய் நாற்சீ
ரோரடியும் பலவடியும் வருநூற்பா வகவல்
புறநிலைவா யுறைவாழ்த்துச் செவியறிகைக் கிளைகள்
பொருளாய்முன் வெண்பாப்பின் னகவல்வரு மருட்பா. (௪)

(௧௫) வருதனிச்சொற் கூன்பொருளோ டடிமுன்வரு மதுவே
வஞ்சியிற் றினுமாம்வெண் பாவகவ லீற்றாற்
சுரிதகமாம் வேறுமடி பாவிசையாற் றளையாற்
கூழெழுத்தெண் ணல்வகுத்த வகுப்பாற்கா ரணத்தாற்
பெருகியிடுங் காலவழக் காற் பலவாஞ் செய்யுட்
பெயரெழுத்து முதலெட்டு வகைவிரிவுங் குவிவும்
பரவுவகை யுளிவனப்பு வண்ணவகை மற்றும்
பலவுமடங் காதடக்கிப் பகருவர்சான் றோரே. (௫)

ஒழிபியல் முற்றும்.

பொருத்தவியல்.

(௧௬) பகர்செய்யுள் மங்கலச்சொல் லெழுத்துத் தானம்
பாலுண்டி வருணநாட் கதியே யென்றாப்

* இப்பாட்டுமுதல் மூன்றுபாடற்கு உரைசிதைந்தும், ஏனையியலுக்கு உரையில்லாமலும் பிரதிகள் காணப்படுகின்றன.

புகரில்கண மெனப்பத்தும் பிறங்கு கேள்விப்
புலவர்புகழ் மூன்மொழிக்குப் புகல்வர் செம்பொற்
சிகரகிரி யெனப்பணைத்துப் புடைத்து விம்மித்
திரண்டெழுந்து வளர்ந்திளகிச் செறிந்த கொங்கைத்
தகரமலர்க் குழற்கருங்கட் குமுதச் செவ்வாய்ச்
சரிவளைக்கைக் கொடியென்னத் தயங்கு மாதே. (க)

(கஎ) மாமணிதேர் புகழமுத மெழுத்துக் கங்கை
மதிபருதி களிறுபரி யுலகஞ் சீர்நாள்
பூமலைகார் திருக்கடனீர் பழனம் பார்சொற்
பொன்றிகிரி பிறவுமுதன் மொழிச்சீர்க் காகும்
நாமவகை யுளிசேர்தல் பொருளை தின்மை
நலமிலதாய் வைத்தல்பல பொருளாற் றேன்ற
லாமினிய சொல்லீறு திரிதல் போலு
மாதிமொழிக் காகாவா னந்த மாமே. (உ)

(கஅ) ஆனவெழுத் தொன்பதே ழைந்து மூன்றும்
ஆகாதெட் டாறுநான் காதிச் சீர்க்கே
யூனமிலா அஆவும் இஈ ஐயும்
உஊவும் எஏயும் ஒஓ ஔவும்
தானமிவை வகையாமந் தாதி தன்னிற்
றலைவன்பேர் முதலெழுத்திற் பால ஞாதி
மேனிலையெண் ணிற்பால குமார ராசர்
வேண்டிடும்வேண் டாவிருத்த மரணந் தானே. (ந)

(கசு) மருவுகுறி லாறெடில்பெண் ணவரி வர்க்கா
மயங்கினுமாம் வரலாகா பேடொற் றுய்த
மூரியகச தநபமவ வேழோ டாதி
யுயிர்க்குறிலன் கிவையமுத மாதிச் சீர்க்கும்
அரிய தசாங் கத்தயற்கு நமை தாகு
மமுதமொழிக் கல்லாத வெழுத்துங் கான்மாத்
திரையளவில் கேளமுடன் மூன்று நஞ்சாய்ச்
செப்புமெழுத் திவையெல்லாந் தீதா மன்றே. (ச)

(௨0) தீதிலுயி ரீரா று முதலொற் றாறுந்
திருமறையோர்க் கடைவேயோ ரா று வேந்தர்க்
கேதிலவை ரனைக்கல்வணி கர்க்கா மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
யோதிமன்றன் படைப்புயிரே யரன்மால் செவ்வே
ளும்பர்கோன் பருதிமதி மறலி நீர்க்கோன்
காதலனா கேசன்முத லிவ்வி ரண்டாய்க்
கம்முதன்மூ வாறொற்றுங் கருதிச் செய்தார். (௫)

(௨௧) கருதுமுயி ரடைவேநான் கைந்து மூன்று
கார்த்திகையே பூராட முத்தி ராட
முரமருகவ் வரியினன் கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புனர்தம் பூச
மிருமைகொள்சவ் வரியினன் கைந்து மூன்றி
ரேவதியச் சுவனிபரணி ஞகர மூன்று
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்று
வளர்சோதி விசாகமே சதைய மன்னும். (௬)

(௨௨) சதிதிகழ்நவ் விணிலா று மூன்று மூன்றுந்
தருமனுடங் கேட்டையே பூரட் டாதி
திதமிகுபவ் வரியினன் கிரண்டோ டாறுத்
திரமுதன்மூன் றாமவ்வி லாறு மூன்று
மிதமுடன்மூன் றுமகமா யிலியம் பூர
மியாவுத்தி ரட்டாதி யூயோ மூல
முதவியவம் முதனன்கு மொழிந்த நான்கு
முரோகணியா மிருகசீ ரிடமாம் பேர்நாள். (௭)

(௨௩) பேர்நாளுற் பவனளா தன்மூ வொன்பான்
பிறித்தொன்று மூன்றைந்தே ழாகா தெட்டாங்
கூராசி யும்வயினு சிகமு மாகா
குறில்வன்மை யீறொழிக்கில் வானோர்க் காகும்
நேர்நெடிலின் முதல்நான்கி றில்லா மென்மை
நிலமக்கள் கதிமுதற்சீர்க் காகும் ஒஓ

யேர்மருவு யரலழற விலங்கா மற்றை
　　யெழுத்துநர கக்கதிமுன் னிவைவா ராதால். (அ)

(உ௪) வானிலகு நேர்குருவே நிரையாம் வெண்சீர்
　　வரில்நபத வகணநாட் பரணி மும்மீன்
ஊனமிகு புனர்பூசம் பூசம் வாணு
　　ளுற்றபுகழ் சூனியநோய் பலன்க ளாகுந்
தேனணியாய் வஞ்சிச்சீ ரடையே நான்குந்
　　திகழ்சரம யகணநாட் சோதி யாரல்
தானமுறு கேட்டைசத யந்தான் கேடு (கூ)
　　சாவுதிரு மகிழ்ச்சிபலன் றரத்தொ டங்கும்.

(உ௫) துறக்கமதி வான்பருதி காய்ச்சீர் முன்னுஞ்
　　சூழ்காற்றுத் தீநிலநீர் கனிச்சீர்ப் பின்னு
நிறுத்துகண மிவ்விரண்டா மகவற் சீரின்
　　நேரீறு வெள்ளைச்சீர் நிரைவஞ் சிச்சீர்
சிறப்புடையிவ் விரண்டுமாங் கணப்பேர் மற்றுந்
　　திகழியற்சீ ரயன்றிருக்கோக் கருடன் மூன்றும்
வெறுத்தபின்னு மாமென்ப விறைவ னுட்கு
　　மேவுகண நாட்பொருத்தம் வேண்டு மாதே. (ய)

(உ௬) ஆவதுமங் கலத்தேற்ற பரியா யச்சொ
　　லடைகொடுத்து முதற்சீருக் கடுத்த செய்யுண்
மேவுதலை யிடைக்கடைமங் கலச்சொல் வைத்து
　　விதியெழுத்துப் பால்வருண மயங்கு மென்ப
வாவுமொரு நற்கதியால் முன்னோர் நூலின்
　　மங்கலத்தா லஞ்சுசில வமுத மாகுந்
தூவமுத மெனிற்கதியிற் பழுது போமேற்
　　றொடர்கலப்பா மரபினதுதொடக்கஞ் சொல்வாம். (கக)

பொருத்தவியல் முற்றும்.

மரபியல்.

(௨௭) நூறுகொலைநீக் கித்தெய்வக் காப்பாய்ச் சுற்றத்
தொகையளவு வகுப்பகவல் விருத்தந் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றிற்சிறுதே ரிவைபின் மூன்றுந்
தெரிவையர்க்குப் பெருகழங்கம் மானை யூசல்
பெறுமூன்று முதலிருபத் தொன்று மொற்றை
பெறுந்திங்க டனிற்பிள்ளைக் கவியைக் கொள்ளே. (௧)

(௨௮) கொண்டபுயர் தவமதங்கம் மானை காலங்
குறங்களிசம் பிரதமறம் பாண்கார் தூது
வண்டுதழை கைக்கிளைசித் திரங்க லூசல்
மடக்குமருட் பாவகவல் விருத்தம் வெண்பா
வெண்டுறைவஞ் சித்துறையா சிரியம் வஞ்சி
விருத்தப்பாக் கலியினமந் தாதி யாகக்
கண்டவைமுன் னாதியொரு போகு வெண்பாக்
கலித்துறைநேர் கூறல்கலம் பகமா மன்றே. (௨)

(௨௯) அன்புறுதே வர்க்குநூ றிழிவைந் தையர்க்
கரசர்க்குத் தொண்ணூறு வணிகர்க் கைம்பா
னின்புறுமுப் பானுழவர்க் கமைச்சி னுள்ளோர்க்
கெழுபதெனுங் கலம்பகத்தம் மானை யூசல்
முன்பொருபோ கொழித்தது பன்மணிமா லைப்பேர்
மொழிவெள்ளை நூறுகலித் துறைநூ றுதல்
நன்குறிலந் தாதிகலித் துறைநா னூறாய்
நடப்பதகப் பொருட்கோவை நாம மன்னே. (௩)

(௩0) மன்னிருபான் வெள்ளைகலித் துறையி ரட்டை
மணிமாலை நூறுவெள்ளை யகவல் வஞ்சி
பின்னர்கலித் துறையதிணை மணிமாலைப்பேர்
பேசகவல் வெள்ளைகலித் துறைமுப் பானாற்

சொன்னதுமும் மணிக்கோவை வகுப்பு முப்பான்
றூழொலியந் தாதிவெள்ளை யகவற் பாவாற்
பன்னுமிரு பாவிருப திவையந் தாதி
பயோதரங்கண் ணுரைத்திடலப் பேர்ப்பத் தாமால். (௪)

(௩௧) பத்தியல்வெண் பாவின்மலை நதிநா டூர்தார்
பரிகளிறு கொடிமுரசு செங்கோல் பாடின்
மெத்துதசாங் கப்பத்தாந் தசாங்கந் தன்னை
வெண்பாவாற் றெண்ணூறேழ் பஃது முப்பா
னித்தகைமை மொழிவதுசின் னப்பூ வாகு
மெழிற்கொடைசெங் கோனூர் வில்வாள்வேன்மா
அத்திதனித் தனியகவல் விருத்தம் பத்தா
லுறைவிருத்த விலக்கணமா மமுதச் சொல்லாய். (௫)

(௩௨) சொற்கலித்தா ழிசையகவல் விருத்த மாதல்
சுற்றமுடன் றாழிசையாய்ச் சொல்வ துசல்
வற்கவுயிர் கசதநப மவவெட் டின்சூழ்
மருவகவல் வரின்வருக்க மாலை வெள்ளை
நற்கலியின் றுறையகவ லந்தா தித்த
நடைமுப்பான் மும்மணிமா லைப்பேர் மேலோ
ரொற்கமிலா சிரியவிருத் தத்தைக் கூட்டி
லொருநாற்பான் நான்மணிமா லைக்கென் றேதே (௬)

(௩௩) ஓதும்வெள்ளை கலித்துறையா சிரியமன்பா
வுறுவிருத்தம் வகுப்பைந்தா லுரைக்கி லம்ம
கோதிலலங் காரபஞ்ச கப்பே ரெட்டுக்
குலவகவல் விருத்தமுறு தெய்வங் காப்பா
மீதட்ட மங்கலமிப் படியொன் பானு
மெத்துநவ மணிமாலை யெப்பாட் டேனுந்
தீதிலொரு பாவொருபா வொருபஃ தென்ப
செப்பிவைக ளுன்னையுமந் தாதி தன்னால். (௭)

(௩௪) அகவல்விருத் தம்வகுப்பா தல்பத் தாதி
யந்தநூ றுகும்பல்சந்த மாலை

புகழுகவ லாற்புலவர் பாணர் கூத்தர்
பொருநர்முத லவருரையாற் றெதிர்ப்ப டாகப்
பகருமதாற் றுப்படையாங் கலிவெண் பாவாற்
பாதாதி கேசங்கே சாதி பாத
மகிழவுரைத் திடிலந்தப் பேரா மந்த
வகையுரைக்கின் வெளிவிருத்தத் தங்க மாலை (அ)

(௩௫) மாசில்குல மகளுக்கு வகுப்பு வெண்பா
வருபொருளொன் பானென்பா னாகப் பாடிற்
றேசுயர்மங் கலவெள்ளை வேந்தர்க் குண்மை
திகழ்கீர்த்தி யுரைப்பதுமெய்க் கீர்த்தி வஞ்சி
பேசுகுணப் பேரடுக்கி மடவார்க் கோதிற்
பெரும்புகழ்ச்சி மாலையப் படியாண் பாற்கு
மாசகல வுரைக்கிலது நாம மாலை
வருங்காம மொருதலைக்கைக் கிளைய தாகும். (௯)

(௩௬) குழமகனை யடையாளங் கலிவெண் பாவாற்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பை பின்மூன்
றியன்மங்கை பத்தொன்பான் மடந்தை யையைந்
தழகரிவை முப்பதஃதோர் தெரிவை நாற்பா
னும்வயது பேரிளம்பெண் முதலா யுள்ளோர்
தொழவுலாப் போந்ததுலாத் தலைவன் பேர்க்குத்
தொடையெதுகையொன் றிலின்ப மடலாய்ச்சொல்லே

(௩௭) சொன்னமா தரைக்கண்டு கனவிற் சேர்ந்தோன்
றுணிவன்மட லென்றதுலா மடல்பாங் கற்கு
ளின்னலுரைத் திடுதலனு ராக மாலை
யிருதிணையை விடாதிவ் வைந்து முப்பாப்
பன்னுபொரு ளிடங்காலந் தொழின்முப் பானாற்
பாவெழுபான் தொண்ணூறு நூறால் வெண்பா
மன்னுகலித் துறையாதல் புகலப் பேரான்
மாலையுமா மெண்ணானு மருவும் பேராம். (௰௧)

(௩௮) மகிழ்நிரைகோள் வதுவெட்சி கரந்தை மீட்டல்
மாற்றார்பாற் செலல்வஞ்சி யூன்றல் காஞ்சி
பகர்மதிலைக் காக்குமது நொச்சி சுற்றிப்
படைவளைத்த லுழிஞைபொரல் தும்பை வென்று
புகழ்படைத்தல் வாகையது மாலைப் பேராற்
போற்றுவது மாலையுமாப் புகல்வர் தானை
யகலமுறைப் பதுதானை மாலை தூசி
யணிவகுப்பிற் றூராகைமா லையைச்சொல் லாய்ந்தே ()

(௩௯) ஆய்ந்ததசப் பிராதுற்ப வம்பத் தான
வரிபிறப்பா சிரியவிருத் தத்தால் வாழ்த்தில்
ஏய்ந்திடுநா ழிகைவெண்பா மன்னர்க் கீசர்க்
கெய்தியநா ழிகைவெண்பா நாலெட் டாய்ச்சொல்
வாய்ந்தசெருக் களவஞ்சி களத்தைக் கூறல்
வரலாற்று வஞ்சிபல வரலா றோதல்
பாய்ந்திடுமும் மதத்தானைத் தொழிலோர் கொல்லும்
படைக்களிற்றைக் கண்டரசன் பற்றிச் சேர்தல். ()

(௪௦) படைபுக்கா யிரவேழும் மெதிரார் போரிற்
படப்போர்செய் தானுக்குக் கடவுள் வாழ்த்துக்
கடைதிறப்புப் பாலைநிலங் காளி கோட்டங்
கழுதுநிலை காளிக்குப் பேய்ச்சொல் பேய்க்குத்
தொடர்காளி சொலலதனுற் றலைவன் கீர்த்தி
சொல்லலவன் சேறல்புறப் பொருடோன் றப்போ
ரடுதல்களம் விரும்பலிவை நாற்சீ ராதி
யடியிரண்டி லேறுமற் பரணி பாடே. (மீசு

(௪௧) பாடுநெறி வணக்கம்வாழ்த் தொன்று நாலாய்ப்
பகர்பொருண்முன் வரவிறைவன் வெற்பு வேலை
நாடுநகர் பொருள்பருவமிரு சுடர்மெண் வேட்டல்
கண்ணன்முடி பொழில்புனலா டல்கள் ளுண்டல்
கூடுமகிழ் வூட றுனி புதல்வர்ப் பேறு
கூறிடுமந் திரந்தூது செலல்போர் வென்றி

நீடுசந்தித் தொடர்ச்சிசுவை பாவந் தோன்ற
 நிகழ்த்திலம்ப முதற்பெருங்காப் பியத்துக் கம்மா ()

(சஉ) அறையுமிதிற் சிலகுறைபா டெனினுங் குன்று
 தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
பெறுவதுகாப் பியமாகும் புராண மாகும்
 பேசின்முத னூல்பொருளோ டளவு தன்மை
செறிமிருதி செய்வித்தோன் கருத்த னுனுந்
 திகழுமிடு குறியானு நூற்குப் பேரா
முறுகலிவஞ் சிப்பாக்கை யறத்துக் காகா
 வுரைப்பதினி வாழ்ததினுக்கெப் பாவு மாமே. (கசு)

(சங) பாடுமுறை தொடர்செய்பு டெரிகக வல்ல
 பாவலனற் குணங்குலஞ்சீ ரொழுக்க மேன்மை
நீடமுகு சமயநூல் பிறநூல் மற்று
 நிகழ்த்துநா லிலக்கணநாற் கவியுள் ளானாய்
நாடுறுப்பிற் குறைவிலனாய் நோயி லானாய்
 நாற்பொருளு முணர்ந்துகளை தெளிந்து மூப்பான்
கூடும்வய திகழ்ந்தெழுபான் வயதி லேறாக்
 குறியுடைய னிலவன் கவிதை கொள்ளே. (கஎ)

(சச) கொள்ளுமிடம் விதானித்துத் தொடைய னூற்றிக்
 கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பந்
துள்ளுபொரி விளக்கொளிர முரசி யம்பத்
 தோகையர்பல் லாண்டிசைப்ப மறையோர் வாழ்த்த
வெள்ளைமலர்த் துகில்புனைந்து தவிசின் மேவி
 வேறுமொரு தவிசிருத்திச் செய்யுள் கேட்டே
யுள்ளமகிழ் பொன்புவிபூ ணுடை மற்று
 முதவியே முடிபுலவ னுடன்போய் மீளே (கஅ)

(சரு) உடம்படச்செய் யான்செய்யுட் பிறர்பாற் கூறி
 யூற்றதிரு வவனிடைப்போ யொதுங்கு மன்றித்
திடம்பெறச்செய் யுள்வரைந்து செம்பூச் சூட்டித்
 தெருவுமயா னம்புற்று காளி கோட்டத்

திடந்தனிலங் கவன்றன்னை நினைந்து சுட்டா
வீராறு திங்கடனி லிறுதி யாவன்
தொடர்ந்துசெயா துளதொரந்தாற் சுற்றத் தோடுந்
தொலைவனிஃ துண்மையகத் தியன்றன் சொல்லே.

(௪௬) அகத்தியன்சொல் லெழுத்துமுதற் குற்றஞ் செய்யுட்
கடையாமற் றொடைகொண்டா லடையுஞ் செல்வ
மகத்துயர்நோ யகலு மகலாது சுற்றம்
வாணாளு மதிகம்வழி மரபு நீடுந்
தொகைக்குற்றம் பாட்டுறிற்செல் வம்போம் நோயாஞ்
சுற்றமறு மரணமுறுஞ் சோருங் காலுஞ்
சகத்தவர்க்கி தன்றியே தேவர்க காகிற்
றப்பாதிப் பலன்கவிதை சாற்றி னோர்க்கே. (௨௰)

மரபியல் முற்றும்.

ஆகக்கவி—௪௬.

சிதம்பரப்பாட்டியல் உரையுடன் முற்றும்.